

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2053 கடகம் நல்லோரை ஆடித் திங்கள், 21ம் நாள் (11-08-2022) நிறைமதி வெளியீடு +94 21 221 2739


## வாழும்போது வாழ்த்துவோம்



3-08-2022 அன்று 80வது அகவை கொண்ட சொ.சொ. மீ. சுந்தரம் ஐயா மண்ணில் நல்ல வண்ணம் வாழ தென்னாடு ஐம்பூதநாதப் பெருமானிடம் விண்ணப்பம் வைக்கிறோம்.

# யாழ்ப்பல்கலைக்கழக அருள்மிகு பரமேசுவரப் பெருமான்

# மண்டலமுடிவில் சங்கு நீராட்டுக் காணுகின்றார்



சிவனோடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனோடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை
புவனம் கடந்தன்று பொன்னொளி மின்னும்
தவனச் சடைமுடி தாமரையானே - **திருமந்திரம்**

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகப்பதியுறையும், அருள்மிகு பார்வதியம்மை உடனுறை பரமேசுவரப் பெருமான் திருக்கோயிலானது, ஓர் நூற்றாண்டாய் நிலைத்து, இன்று மூன்றாவது திருக்குட நன்னீராடடையும் கண்டு எங்கும் மங்காத மிளிர்வுடன் விளங்குகின்றது.

இத்திருக்குடமுழுக்குப் பெருவிழாவானது, பரமேசுவர பெருமானின் திருவருளழகு பொருந்திய இரட்டை மணிக்கூட்டுக் கோபுரங்களுடன் கூடிய கோபுரப் பொழிவும், தெய்வீகம் பொருந்திய சூழலும் ஒருங்கே ஒன்று சேர, பேராசிரியர்கள், சிவாச்சாரியார்கள், சைவப்பெரியோர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சைவ அன்பர்கள், அடியார்கள் என பலரும் புடைசூழ, நற்செய்கை (சுபகிருது) ஆண்டு, ஆடவை நல்லோரை ஆனித்திங்கள் 22ம் நாள் (யூலை 06), வளர்பிறை எழுமைப் பிறை நாளும் (சப்தமி) உத்தர விண்மீனும் கூடிய நன்னாளில், திருவருள் கூடிய நல்வேளையில், சீர்வளர்சீர் சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்களினாலே ஆற்றுகைப்படுத்தப்பட்டு சீரும் சிறப்புமாக நிறைவுபெற்றது.

திருக்குட நன்னிராட்டுக் கிரியை வழிபாடுகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த, மகேசுவரப் பூசையிலும் அடியார்கள் அனைவரும் கலந்து கொண்டு எம்பெருமானின் திருவருளை பெற்றிருந்தனர். இவ்வாறு திருக்குடமுழுக்கு நிறைவடைந்துள்ள நிலையில் நாற்பத்தெட்டு நாட்கள் மண்டலத் திருமஞ்சனப் பூசை வழிபாடு நடைபெற்று வருகின்றன.

மண்டலப் பூர்த்தியை முன்னிட்டு, வருகின்ற ஆவணித் திங்கள் 7ம் நாள் (23-08-2022), தேய்பிறை ஒருமைப்பிறை நாளும், திருவாதிரை நாண்மீனும் கூடிய நன்னாளில் பரமேசுவரப் பெருமானுக்கு சங்கு நீராட்டு சிறப்புமாக இடம்பெற இருக்கின்றமை, எம்பெருமானுடைய மீளா அடியவர்களுக்கு கிடைத்த திருவருட்பயனேயாகும்.

(யாழ் பல்கலைக்கழக பரமேசுவரர் திருக்கோயில் பற்றிய வரலாறு 4,5ம் பக்கங்களில் விரிவாக உள்ளது)

சங்கு கொண்டு நீர் ஊற்றி மகிழ்ந்திடுவோம்.
எங்கள் சங்கம் வளர்த்த முதல்வனைப் போற்றிடுவோம்.

திருச்சிற்றம்பலம்

## திருக்கேதீச்சரத்தில் மண்டலத் திருமஞ்சன முடிவில் ஆவணித்திங்கள் 7ம் நாள் (23 ஆகஸ்ட்) சங்கு நீராட்டு



திருக்கேதீச்சரம் மேவிய கேதாரத்தாருக்கு, நற்செய்கை (சுபகிருது) ஆண்டு, ஆடவை நல்லோரை ஆனித் திங்கள் 22ம் நாள் (யூலை 6), வளர்பிறை எழுமைப் பிறைநாளும் (சப்தமி) உத்தர விண்மீனும் கூடிய தினத்தில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மண்டலத் திருமஞ்சன நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

மண்டலப் பூர்த்தியை முன்னிட்டு, வருகின்ற ஆவணித் திங்கள் 7ம் நாள் (23-08-2022), தேய்பிறை ஒருமைப்பிறை நாளும், திருவாதிரை நாண்மீனும் கூடிய நன்னாளில் மாந்தை மாநகர் மன்னனுக்கு சங்கு நீராட்டு இடம்பெறவிருக்கிறது. அத்தினத்தில் அனைத்து அடியார்களும் மாந்தை மாநகருக்கு வருகைதந்து மன்னனின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் திருவருள் துணைநிற்கட்டும்.

திருச்சிற்றம்பலம்

## உத்தரகோசமங்கை மண்டபத் தூண்களை அரன்பணி அறக்கட்டளை சீராக்கம்



மண் தோன்றிய போதே மங்கை தோன்றியது என்ற முது மொழியின் மூலம் உத்தரகோசமங்கையின் பழமையை நாம் அறியலாம். இத்தல வரலாற்றில் இராவணனின் மனைவி மண்டோதரி திருமணம் நடந்த மண்டபம் குறிக்கப்படுள்ளதால் இத்திருக்கோயில் இராமாயண காலத்திற்கு முற்பட்டது என்று புலனாகிறது.

இவ்வளவு பெருமை வாய்ந்த திருக்கோயிலில் மூலவர் சன்னதிக்கு முன்பாகவும், அம்மன் சன்னதிக்கு முன்பாக உள்ள மண்டோதரி மண்டபத் தூண்கள் மணல் பாறைகளால் ஆனவை. அவை யாவையும் கடல் காற்றின் காரணமாக பழுதடைந்த நிலையில், திருவருள் துணைகொண்டு அரன்பணி அறக்கட்டளை அடியார் பெருமக்கள், அவற்றை சீர் செய்யும் பொறுப்பினை ஏற்றுள்ளனர்.

அந்தவகையில் உத்தரகோசமங்கையில் நடைபெற்று வரும் திருப்பணிகளைப் பார்வையிடும் முகமாக 31-7-22 ஞாயிற்றுக்கிழமை அன்று சுமார் 650 அடியார் பெருமக்கள் திருக்கோயிலுக்கு வருகை தந்திருந்தனர். அத்தினத்தில் வழிபாட்டிற்காக வருகைதந்திருந்த சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை நீதியரசர் மாண்புமிகு சிவ பி.என் பிரகாஷ் ஐயா அவர்கள், அடியார் திருக்கூட்டத்தினைக்கண்டு ஆச்சரியம் அடைந்து, அடியார்கள் வந்திருப்பதன் காரணத்தை கேட்டறிந்து அவர்களிடம் வந்து அரன்பணி அறக்கட்டளை நிறுவுனர் பவானி சிவ அ.தியாகராசன் ஐயாவினை வணங்கி, அடியார்களிடம் பேசி, அவர்களின் உயரிய திருப்பணியினை புகழ்ந்து பாராட்டினார். சிவனடியார்களைப் பார்ப்பது சிறப்பானது என்றும் உள்ளுணர்வுடன் கூறினார்.

திருச்சிற்றம்பலம்



# சைவநெறிக் கருவூலமாக திகழும் "பன்னிரு திருமுறை செயலி" வெளியிடப்பட்டது

**"சைவமும் தமிழும் தழைத்தினிது ஓங்கும் வண்ணம்"** அரும்பெரும் திருப்பணிகளை செய்து வருகின்ற தருமை ஆதீனம் 27ஆவது குருமகாசந்நிதானம் கயிலை சீர்வளர்சீர் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் பொற்கால அருளாட்சியில், வரலாற்றுச் சிறப்புமிக்க சைவநெறிக் கருவூலமாக திகழும் **"பன்னிரு திருமுறை செயலி"** வெளியிடப்பட்டது.

18,246 பாடல்கள், 1254 பதிகங்கள், 283 திருக்கோயில், 27 அருளாளர் என்று விரிந்த திருமுறையை, அறிவுக் களஞ்சியமாகத் தமிழர் வாழ்வியல் மற்றும் பண்பாட்டு வளர்ச்சிப் பேழையாக இறை உணர்வுக்கு வழிகாட்டியாகத் திகழும் தமிழ்மறையை மொழிபெயர்ப்பது இலகுவான காரியம் அல்ல.

அத்தகைய பன்னிரு திருமுறையின் 18,246 பாடல்களையும் சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து ஓதுவதற்கு பொழிப்புரை, குறிப்புரையோடு மற்றும் பிறமொழிகளில் புரிந்து கொள்வதற்கு ஏதுவாக மறுவன்புலவு க. சச்சிதானந்தம் அவர்கள் உதவியோடு தெலுங்கு, கன்னடம், மலையாளம், சிங்களம், இந்தி, வடமொழி, மலாய், மியன்மார், ஆங்கிலம், யேர்மன், வங்காளம், நேபாளம், அசாம் ஆகிய 13 மொழிகளுக்கு, ஏறத்தாழ 40 மொழிபெயர்ப்பாளர்களை ஒருங்கிணைத்து பன்மொழிபெயர்பும் செய்து, இவை அனைத்தையும் ஒரே தளத்தில் எங்கும் எப்பொழுதும் பயன்படுத்துகின்ற வகையில் அலைபேசி செயலியாக (Android Application from Play Store as **"Thevaaram Panniru Thirumurai"** Dharmapuram Adheenam) வடிவமைத்து உருவாக்கப்பட்டுள்ளது.

அதனை அனைவரும் பயன்படுத்திக்கொள்ளும் விதமாக தென்கயிலாயம் திருவையாற்றில் அப்பர் கயிலைக் காட்சி பெருவிழாவின் சிறப்பு அங்கமான "மாபெரும் திருமுறை சேர்ந்திசை" நிகழ்விற்கு சீர்வளர்சீர் குருமகாசந்நிதானம் எழுந்தருளியபொழுது, அருளாசி வழங்கி இச்செயலியை வெளியிட்டு அருளி உள்ளார்கள். எனவே நாமும் எங்கள் அலைபேசியில் பதிவிறக்கம் செய்து திருமுறைகளை ஓதி பேரானந்த பெருவாழ்வு பெற்றுய்வோமாக!

**என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே!**
**திருச்சிற்றம்பலம்**



**செய்தித் தொகுப்பு**
**சிவத்திரு. தென்னாடு நிலவன்,**
**தென்னாடு செய்தி ஆசிரியர்.**

# நல்லைக்கந்தனின் திருத்தேர் வடம்பிடித்து முருகப்பெருமான் திருவடியில் இடம்பிடிக்க வாருங்கள்

ஈழத்தின் பெருமை வாய்ந்த சைவக் கோயிலாகத் திகழும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த திருவிழா, கடந்த ஆடித்திங்கள் பதினேழாம் நாள் (02.08.2022) வெற்றிகரமாக ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்று வருகின்றது. கடந்த இரண்டு வருடங்களாக இடர்காலச் சூழ்நிலையின் காரணமாக இடம்பெறாமல் இருந்த திருவிழாவானது இம்முறை இடம்பெறுகின்றது. இத்திருவிழா இருபத்து ஐந்து நாட்கள் கொண்டது. இருபத்து நான்காம் நாள் திருவிழாவாக, வருகின்ற ஆவணித் திங்கள் ஒன்பதாம் நாளன்று (25.08.2022) பெருந்தேரில் நல்லைக்கந்தப் பெருமான் திருக்காட்சி வழங்குவார். அந்த சைவப்பெருவிழாவைக் காணுவதற்காக சைவப்பேருலகம் காத்து இருக்கிறது.

**ஏற்போர் தாம்வந்து இச்சையின் மகிழ்வொடு**
**வாய்ப்பாய் வீசும் பொற்றபை நெடுமதிள்**
**யாழ்ப்பாணாயன் பட்டின மருவியபெருமாளே.**
**திருச்சிற்றம்பலம்**



# சிங்கையில் 42வது திருமுறை மாநாடு - 2022

சிங்கப்பூரில் சைவமும் தமிழும் தளைத்தோங்கச் செய்த காரைநகர் அம்பலவாணரும் அவரது துணைவியார் கண்மணி அம்மையாரும் இணைந்து, 1981ம் ஆண்டு **"திருமுறைகள் ஒளிக்கட்டும் திருவருள் பெருகட்டும்"** என்ற உட்பொருளோடு தொடங்கி வைத்த திருமுறை மாநாடு, கடந்த ஆடித்திங்கள் 13,14,15 (ஜூலை 29,30,31) என மூன்று நாட்கள் சிங்கையில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வானது சிங்கையில் சௌத் பிரிஜ் சாலையில் உள்ள அருள்மிகு முத்துமாரி அம்மன் கோயிலில் திருமுறை மாநாட்டு ஏற்பாட்டுக் குழு தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சிறப்புப் பேச்சாளராக, தமிழ்நாடு, தேவகோட்டையை சேர்ந்த இலக்கியமேகம் திரு. ஸ்ரீநிவாசன் அவர்கள் பங்குபற்றியிருந்தார். இந்நிகழ்வின் சிறப்பம்சமாக 63 நாயன்மார்கள் குருபூசை, சிங்கபூர் 31 மார்ஸிலிங் ரைஷில் உள்ள அருள்மிகு சிவகிருஷ்ணா ஆலயத்தில் இடம்பெற்றது. இத்திருமுறை மாநாட்டை முன்னிட்டு, "ஓம் நமசிவாய" எனும் திருவைந்தெழுத்து மந்திரத்தை 1008 தடவை எழுதி அனுப்புவோர்க்கு நூற்பரிசு வழங்கி ஊக்குவிக்கின்றமை போற்றுதலுக்குரியதாகும்.

**"ஓதிய எழுத்தாம் அஞ்சும் உறுபிணி வரத்தாம் அஞ்சும்" - பெரியபுராணம்**
**திருச்சிற்றம்பலம்**

# முதல் சதுரங்க வல்லபர் சிவனே! என்று கூறிப் போற்றிய இந்தியப் பிரதமர்



சதுரங்க ஒலிம்பியாட் போட்டி இம்முறை சென்னை மாநகரில் கோலாகலமாக இடம்பெற்றது. இந்நிகழ்வில் இந்தியாவினுடைய பிரதமராக பணியாற்றிக் கொண்டிருக்கின்ற, மதிப்பிற்குரிய திருவாளர் நரேந்திர மோடி ஐயா அவர்கள் கலந்து கொண்டு, தொடக்கவுரையினையும் ஆற்றியுள்ளார். அவ்வுரையிலே அவர் "தமிழ்நாட்டில் திருப்பூவனூரில் சதுரங்க வல்லப நாதர் என்ற ஓர் கோயில் உள்ளது. இந்த கோயிலுக்கு சதுரங்க ஆட்டத்துடன் தொடர்புடைய வரலாற்றுக் கதை ஒன்று உண்டு. அக்கதையின் படி இறைவனே இங்கு வந்து இளவரசியுடன் சதுரங்கம் ஆடியுள்ளார். எனவே சதுரங்கம் தமிழ்நாட்டிற்கே உரியது, தமிழ்நாட்டிற்கும் சதுரங்கத்தோடு பழமையான தொடர்புள்ளது." என்று திருப்பூவனூர் பதியுறையும் கற்பகவல்லி உடனுறை சதுரங்க வல்லப நாதரின் திருவருளைப் போற்றிப் புகழ்ந்துள்ளதோடு, உலகப் பொதுமறைகளிற்கெல்லாம் முதல் மறை தமிழே என்று உணர்த்தியும் உள்ளார்.

திருப்பூவனூர் சதுரங்க வல்லப நாதர் கோயிலினுடைய திருப்பதிகங்கள், திருத்தலச் சிறப்பு, திருத்தல வரலாறு, திருக்கோயில் அமைப்பு என்பன இப்பத்திரிகையில் **"ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்"** என்ற தொடர் கட்டுரையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.




சிவத்திரு. சிவ. செந்தமிழாதன்,
ஆசிரியர் - தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் - கொக்குவில்.
0715588737, aathan@thennadu.org



# திசையெங்கும் சைவத்தமிழ் முழக்கம்!

சைவம் மீள் எழுச்சிக்கு உள்ளான காலத்தில், தேவாரங்களும், அடியார் வரலாறும், பண்ணோடும், தமிழ் பாங்கோடும் மக்கள் மத்தியில் பரப்பப்பட்டது. அருளாளர்களும், மடாதிபதிகளும் ஆதீனங்களும் இப்பெரும் பணியைத் தலைமேற்கொண்டு செய்யலானார்கள். தனவந்தர்களும், வள்ளல்களும் தம்மாலான நிதியீட்டத்தை நல்கினர். நாளும் சைவம் தளைத்து வளர்ந்தது! முடிந்த முடிவாகிய, சைவ சித்தாந்தத்தை பலரும் ஏற்றுக்கொண்டு சித்தாந்த சைவர்களானார்கள். பட்டிதொட்டியெங்கும் இச்சமயநெறி, கைவிளக்கொளியிலும், நிலவொளியிலும், சமயப் பேருரைகளாலும் பண்ணோடு பாடிய பதிகங்களாலும், நடன, நாடக ஆற்றுகைகளாலும் பரப்பட்டது.

உயர் ஞானமாகிய பதிஞானத்தை உணர சந்தான குரவர்கள் பரம்பரையாக வந்த அருளாளர்கள் ஞானமார்க்கத்தில் நின்றும், அறிவின் வழியாகவும் சைவத்தை பகுத்தறிவின் பாங்கோடு, இறைக்கொள்கையை, சற்காரியவாதத்தை முன்வைத்து வலியுறுத்தினர், அறிவின்பாலும் தர்க்கத்தின்பாலும் ஈர்க்கப்பட்டவர்கள் சைவநெறியே உயர்நெறி என்று போற்றி அதனைப் பின்பற்றவும் பரப்பவும் விளைந்தனர். அந்நியர் ஆதிக்கத்தாலும் அடக்குமுறைகளாலும், இந்த சென்னெறியில் இடைவந்த தளர்வால் எப்படி, சமணம் பௌத்தத்தை எதிர்த்து சைவம் மீள் எழுச்சி கண்டதோ, அப்படி கிறித்தவ சமயத்தையும் எதிர்த்து மீள் எழுச்சி காணவேண்டிய சூழல் மீண்டும் உருவாகியது.

ஆங்கிலக்கல்வி, விஞ்ஞான தொழில்நுட்பத்தின் தோற்றுவாய் அவற்றின் மீது உருவான மோகம், சந்தான குரவர் வளர்த்தெடுத்த அறிவின் நூல்களையும், உயர் தத்துவத்தையும் மக்கள் மனங்களில் மறைப்புச் செய்தது. தேவாரங்களும், பண்ணும், இசையும் தம் வட்டத்தைக் குறுக்கிக் கொண்டன. கோயில்கள் மட்டுமே சமயத்தின் நிலையங்கள் என்ற குறுகிய தன்மை வந்து வாய்த்தது. இருந்தபோதும், இறை கருணையாலும், முறை முறை வந்த ஆற்றலாளர்களாலும் இன்றுவரை இச்சமய நெறி இயன்றவரை தன்னை காத்தும், தன்னைச் சார்ந்தவர்களை உய்வித்தும் வருகின்றது.

தமிழ் நாட்டில் ஆதீனங்களும், மடங்களும் இன்று இப்பணியை செவ்வனே செய்கின்றது. ஈழவளத்திருநாட்டில் அத்தகு ஆதினங்கள் இல்லையே ஆயினும் இருக்கின்ற, நல்லை திருஞான சம்பந்தர் ஆதினம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து, நல்லூர் திருவிழாக் காலத்தில், இளைய சைவப் பிள்ளைகளுக்கு சைவம் பரப்பும் நோக்கில் "தெய்வீகத் திருக்கூட்டம்" நிகழ்வையும், சமயப் புத்தக கண்காட்சியம் நடாத்தி வருவதைப் பார்க்கின்றோம்.

எண்ணிக்கையில் குறைவான அடியவர்கள் கலந்து கொண்டாலும் எடுத்த கருமத்தை தொடர் நிகழ்வாக நிகழ்த்தும், திணைக்களத்தின் பணிப்பாளர், போற்றுதற்குரிய உமாமகேசுவரன் ஐயா அவர்களின் செயலாற்றுகை, அறநெறிப் பாடசாலை மாணவர்களை இலக்காகக் கொண்டு வெற்றிப்பாதையில் செல்கின்றது.

இவ்வாறே, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் பிரதி முதல்வர், செந்தமிழ் சொல்லருவி ச. லலிசன் அவர்கள் முன்னெடுக்கும் 'சைவம் தழைத்தோங்க' என்னும் ஒரு தனியார் தொலைக்காட்சி நிகழ்வையும் காண்கின்றோம். "செய்தக்க அல்ல செயக் கெடும், செய்தக்க செய்யாமையாலும் கெடும்" என்றான் வள்ளுவன்!

காலத்துக்கு தேவையான கனதியான செய்ய வேண்டிய பணிகளைச் சைவம் சார்ந்து இந்த மண்ணில், சிறிதோ பெரிதோ முன்னெடுக்கும் அத்தனைபேரின் பாதங்களையும் என் தலைமேல் தாங்குகின்றேன்! இன்னும் பலர் இம்முயற்சிகளில் முனைய வேண்டும் அதற்கு நல்லூர் பெருந்திருவிழா ஒரு நல்ல தளமாக அமைய வேண்டும்!

**ஆதி தமிழ் அருந்துயர் நீங்கி வாழ,**
**சோதி உயர் சைவம் துலங்கி மீள**
**மேதினியில் எம் கலைகள் மேலும் நீள,**
**வேதியர் போற்றும் நல்லைக் கந்தா நீ அருளே!**

**திருச்சிற்றம்பலம்**




சிவத்திரு.யாழவன் சிவவேதன்,
அடுத்த தலைமுறை ஆசிரியர் - தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் - கொக்குவில்.
+94 (70) 770 1111, sivavethan@thennadu.org



# தோழமை செய்யுங்கள் தொண்டினைப் போற்றுங்கள்

இருவேறு இயல்புடைய இரண்டு பொருட்கள் ஒரு இயல்பைப் பொதுவாக வைத்து அன்பினால் இணையும் உறவு தான் நட்பு. அது ஒரு அழகான இணைப்பு. தேவை கருதாது பழகும் தெய்வீகமான உறவு. நட்பெனும் அடித்தளத்தின் மீது கட்டப்படும் எல்லா உறவுகளும் வலுவானவையாக அமையும். நட்பு இன்றி ஒரு உறவு நீடிக்குமானால், அது காதலாயினும் சரி வேறு எதாயினும் சரி சிதைந்தே போகும்.

நட்பை அடித்தளமாய்க் கொண்டு தான் மற்றைய உறவுகள் கட்டியெழுப்பப்படுகின்றன. உரிமையுடன் ஒன்றைக் கேட்டுப் பெறல், இதயபூர்வமான தொடர்பைக் கட்டியெழுப்பல், இருவருக்கும் இடையிலான இடைவெளியை இல்லாதொழித்தல் போன்ற விடயங்கள் நட்பினால் மாத்திரமே இயலுமான காரியங்கள்.

அந்த வகையில் சைவப் பெருஞ்சமயமும் நட்பை மதிக்காது இருக்குமா. நட்பை நாயகமாய் வைத்துப் போற்றுகின்றது சைவம். இறைவனுடன் உறவுமுறை கற்பித்து இறைவனை மக்கள் மயப்படுத்திய சமயம் சைவம். தம்பிரான் தோழர் என்று பெரியபுராணம் போற்றும் சுந்தரமூர்த்தி நாயனார் நட்பின் தனித்துவத்திற்கு தனிப்பெருஞ்சான்று.

இறைவனை நண்பனாக்கி குறும்புகள் பல செய்து, உரிமையுடன் யாவற்றையும் கேட்டுப்பெற்று, சில சமயங்களில் ஈசனையே நட்போடு கடிந்து கொண்டு, அற்புதம் நிகழ்த்திப் போனவர் சுந்தரர். 'பித்தா' என்று ஈசனை திட்டியது முதற்கொண்டு, பொன் மற்றும் பெண் பெற்றது, ஊடல் தீர்க்க தூதனுப்பியது என எல்லாம் அற்புதமான நட்பியல். இந்த நட்பை சுந்தர் மட்டும் புரியவில்லை. சுந்தரருக்குப் போக்குக் காட்டி, மறைந்திருந்து, சுந்தரரின் கண்ணைப் பறித்து பாட வைத்து மீண்டும் கொடுத்தது என்று ஈசன் கூட குறும்பு செய்தருளிய வரலாறு சைவத்துக்கு மட்டுமே உண்டு.

**ஏழிசையாய் இசைப்பயனாய்**
**இன்னமுதாய் என்னுடைய**
**தோழனுமாய் யான்செய்யுந்**
**துரிசுகளுக் குடனாகி**
**மாழையொண்கண் பரவையைத்**
**தந்தாண்டானை மதியில்லா**
**ஏழையேன் பிரிந்திருக்கேன்**
**என்ஆரூர் இறைவனையே**

இருவருடைய நட்பையும் மேற்படி பாடலில் சுந்தரர் சொல்லும் விதமே தனியழகு. தன்னுடைய தோழனாகி, தான் செய்த குற்றங்களுக்கு உடனாகி, தான் காதலித்த பெண்ணையும் தந்து ஆண்ட ஈசனே உன்னைப் பிரிந்து இருக்க மாட்டேன் என்று சுந்தரர் சொன்ன ஒவ்வொரு வரிகளும் நட்பின் ஆழ உணர்ச்சி.

இதைப் போல பேரழகு மிகுந்த நட்பையும் பெரியபுராணம் குறிக்கின்றது. நட்பு இருவரைத் தாண்டி மேலிடுகின்ற போது, அது நண்பர்கள் கூட்டமாக உருவெடுக்கின்றது. சுந்தரர்  சேரமான் பெருமான்- நொடித்தான் மலையான் இடையிலான நட்பை நண்பர்கள் குழுவாகக் காட்டுகின்றார் சேக்கிழார்.

ஈசனுடைய அனுமதி இன்றி கயிலை வந்து விடுகின்றார் சேரமான் பெருமானார். "இங்கு நாம் அழையாமை நீ எய்தியது என்?" என்று ஈசன் சேரமான் பெருமானாரை வினவ "ஆரூரர் கழல் போற்றிப் புரசை யானை முன் சேவித்து வந்தனன்" என்று பதில் சொல்லுகிறார். நண்பர்கள் குழுவின் நட்பியலை தமிழூற்றினால் வடித்துக் காட்டியிருக்கின்றார் சேக்கிழார்.

மூவருடைய நட்பையும் சேக்கிழார் சித்திரம் வரைந்து போகும் பாடல் இது தான்,

**சேரர் காவலர் பரிவுடன்**
**கேட்பித்த திருஉலாப் புறம் கொண்டு**
**நாரி பாகரும் நலம் மிகு**
**திரு அருள் நயப்புடன் அருள் செய்வார்**
**'ஊரன் ஆகிய ஆலால**
**சுந்தரன் உடன் அமர்ந்து இருவீரும்**
**சார நம்கண நாதர் ஆம்**
**தலைமையில் தங்கும்'** என்று அருள் செய்தார்

அப்படிப் பட்ட பெருமை வாய்ந்த நட்பை நாயகமாய் வைத்துப் போற்றும் சைவசமயிகளாய் பிறந்தது ஊழ்வினைப் பயன். "சைவமாம் சமயம் சாரும் ஊழ் பெறல் அரிது" என்றார் அருள் நந்தி சிவனார். கடந்த நாட்களில் நண்பர்கள் தினத்தைக் கடந்து வந்துள்ளோம். கடந்த ஆடித் திங்கள் கணை (சுவாதி) விண்மீனில் தம்பிரான் தோழரின் குருபூசை கொண்டாடி இருக்கின்றோம். சைவம் சொல்லும் நட்பின் பெருமையைப் போற்றி, நட்பைப் போற்றி, தம்பிரான் தோழரைப் போற்றி, எம்பிரான் சேரமானைப் போற்றி, ஈசனைப் போற்றி உய்வோமாக.

**திருச்சிற்றம்பலம்**

# அருள்மிகு பார்வதி அம்மை உடனுறை பரமேசுவரப் பெருமான்

# விரும்பியுறையும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

**பள்ளித் தலைமனைத்தும் கோயில்கள் செய்குவோம்**
**எங்கள் பரமன் பரமேசுவரனைப் போற்றி மகிழ்வோம்.**

எழில் மிகுந்த இலங்கைத் தீவானது, கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தின் முன்தோன்றிய மூத்தகுடியான பழந்தமிழர் காலத்தில் கடல்கொண்ட தென்னாட்டின் எச்சமாகவும், இலங்கை வேந்தன் இராவணன் ஆண்ட இப்புண்ணிய பூமியாகவும், பல சிவத்தலங்களை தன்னகத்தே கொண்டும் விளங்கியதால், சைவசித்தாந்தத்தின் மெய்யியல் நூலாகவும் செந்தமிழாகமமாகவும் விளங்கப்பெறும் திருமந்திரத்தை இயற்றிய திருமூலரால் சிவபூமி என்று விதந்துரைக்கப்பட்டது. இச்சிவபூமியின் வடபாலாம் ஈழமண்ணின் இதயமெனத் திகழும் யாழ்ப்பாணத்தில், பல் கலைகள் பயிற்றுவித்துப் பற்பல ஆற்றலாளர்களை எம்மண்ணிற்கு பரிசளிக்கும் கூடமாகத் திகழும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமே, அருள்மிகு பார்வதியம்மை உடனுறை பரமேசுவரர் உறையும் பதியாகும்.

அருள்மிகு பார்வதியம்மை உடனுறை பரமேசுவரர் திருக்கோயிலானது, சைவப்பெருமகனார் சேர். பொன். இராமநாதன் ஐயா அவர்களின் **“என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே”** என்ற சிந்தையின் விளைவேயாகும். இதனை,

**“திருவளர் அறிவின் திறந்தொளி நிரம்பும்**
**திறலினன் செயலினன் எனவே**
**தருபுகழ் இராமநாதனின் தவத்தால்**
**தண்தமிழ் ஆங்கிலம் முதலாய்**
**வருமொழி பலவும் சிவநெறி மரபும்**
**வழிவழி நிலவியே மலரப்**
**பரவிடும் அருளால் திசைமுழு தாளும்**
**பரமேசு வரமென பணிவோம்”**

என வித்துவான் க. வேந்தனார் அவர்கள் சேர். பொன். இராமநாதன் ஐயாவின் சைவப்பெரும்பணியை போற்றிப் பரவுகின்றார்.

அன்று இராமநாதன் ஐயாவின் வழித்துணையோடு நிலைகொண்ட எங்கள் பரமேசுவரப் பெருமான், ஓர் நூற்றாண்டாய் இன்றும் மிளிர்ந்து கொண்டிருக்கின்றமை நாம் செய்த பெரும் பேறாகும்.



**“செய்யத்தக்க அல்ல செய்யக்கேடும் செய்யத்தக்க செய்யாமையினும் கெடும்”** என்ற வள்ளுவர் வாக்கிணங்க, சைவத்தின் நிலைத்திருப்பும் பரவுகையும் தான் தமிழனின் நிலைத்திருப்புக் களன் என்பதை உணர்ந்து, இராமநாதன் ஐயா அவர்கள் செய்யவேண்டியவற்றை சரியான நேரத்தில், சரியாக செய்து முடித்ததனால் தான், பரமேசுவரனின் பாதம் பணிந்தோர் பலரும் இன்று, பல்துறைகளில் ஆற்றலாளர்களாக விளங்குகின்றனர். அந்தவகையில் வந்தவர்களில், பரமேசுவரனின் திருவடியில் பயின்று, இன்று பலரையும் **“யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகமுமே”** என சைவத்தின் வழி நெறிப்படுத்தும் துணை வேந்தராக திகழும் பேராசிரியர் சிவத்திரு. சிவக்கொழுந்து சற்குணராசா ஐயா அவர்களும் முதன்மை இடம் பெறுகிறார்.

இன்றைய சூழலில் பல துறையினர் பயிலும் பல்கலைக்கழகமொன்றில், ஆலம் தான் உகந்து அமுது செய்தானின் திருவைந்தெழுத்து மந்திரத்தை பல்கலைக்கழக வளாகமெங்கும் ஒலித்திட, பல்கலைக்கழகத் துறையினரின் திருப்பணி கொண்டு, ஆறு கோடி நிதிச் செலவில், இத்திருக்குடமுழுக்கு பெருவிழாவை நிறைவேற்றியுள்ளனர் என்றால் அதன் பெரும்பங்கு, எங்கள் சைவக்கொழுந்து, துணைவேந்தர் ஐயாவையே சாரும் என்று கூறுவதில் எவ்வகை ஐயமும் இல்லை. பரமேசுவரப் பெருமான் அன்றும் இன்றும் எம்மை வழிநடத்த சைவப்பெருமகனார்களை தந்தருளுகின்றமை பெரும்பேறாகும்.

## பரமேசுவராக் கல்லூரியின் தோற்றம்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனாக விளங்குகின்ற எங்கள் பரம்பொருளாகிய சிவபெருமான் மீது, சேர். பொன். இராமநாதன் ஐயா அவர்கள் அதீத அன்பு வைத்திருந்தார். அவர் எம்பெருமானை பரமேசுவரன் என்று வழங்கியே வணங்கி வந்தார். **“ உலகம் யாவும் பரமேசுவரனின் சொத்து. நாமெல்லோரும் பரமேசுவரனுடைய தொண்டுகள் செய்யும் குழந்தைகள்”** எனும் தலையாய கோட்பாட்டை



கொண்டவராக இராமநாதன் ஐயா திகழ்ந்தார். **“பரம்பரம் சோதி பரனே போற்றி”** என்று இளமையிலிருந்தே பாடித் துதிக்கும் வழமையை கொண்டுள்ளமையிலிருந்து அவரின் தெய்வப்பற்றை உய்த்தறிய முடிகிறது. இவ்வாறான சிந்தனைகளின் கூட்டாகவே அவருள் **“பரமேசுவரம்”** என்ற கருப்பொருள் உருவாக காரணமாயிற்று. இதன் விளைவே பரமேசுவராக் கல்லூரியின் தோற்றமுமாகும்.

கொழும்பிலுள்ள பொன்னம்பலவாணேசர் திருக்கோயில் திருப்பணிகளை செவ்வென முடித்துவிட்டு, யாழ் வருகை தந்த இராமநாதன் ஐயா அவர்கள் அடுத்த ஆண்டே யாழ்ப்பாணம் இணுவிலில் பாரிய நிலப்பரப்பில் பெண்களுக்கான பாதுகாப்புச் சுற்று மதில்களோடு கலைக்கூடம் நிறுவினார். பெண்களுக்கு கலைக்கூடம் நிறுவியாயிற்று, ஆண்களுக்கும் வித்தியாலயம் ஒன்றை அமைக்க வேண்டும் என்ற அவரது எண்ணப்பாடு அவரை பல நாட்களாக உந்துதல் செய்து வந்தது. அவரது அவா எம்பெருமானின் திருவடிகளை எட்டியதன் விளைவாக சுப்பிரமணியம் எனும் பெரியவர் இராமநாதனுக்கு அறிமுகமானார். சுப்பிரமணியம் என்பவர் ஆறுமுக நாவலரின் தாயார் வழி உறவினராவார். சுப்பிரமணியம் ஐயாவின் உதவியுடனேயே திருநெல்வேலியில், பரமேசுவராக் கல் லூரி அமைந்த பெரு நிலப்பரப்பை பன்னூற்றுக் கணக்கான பனைமரங்களோடு இராமநாதன் ஐயா வாங்கினார்.

சேர். பொன். இராமநாதன் அவர்களின் தீரா அவாவானது, 1921-08-21 அன்று பரமேசுவராக் கல்லூரியாக உருவெடுத்தது. திருநெல்வேலியில் தாம் அமைத்த கல்லூரியைப் **‘பரமேசுவர வித்தியாலயம்’** என வழங்க இருந்த அவரது விருப்பம் நாளடைவில் மாற்றம் பெற்று **‘பரமேசுவராக் கல்லூரி’** எனவே வழங்கலாயிற்று. இக்கல்லூரியின் முதல் அதிபராக, சேர். அருணாச்சலத்தின் மகனான அருணாச்சலம் மகாதேவா (கேம்பிரிஜ் பல்கலைக்கழக முதுமாணி பட்டதாரி) அவர்கள் நியமிக்கப்பட்டார். நூறு மாணாக்கர்கள் வசதியாக தங்கிப் பயில்வதற்கான கிடுகினால் வேயப்பட்ட குளிர்மையான விடுதி அமைப்பினையும் இராமநாதன் அவர்கள் ஏற்படுத்தியிருந்தார்.

அக்காலத்தில் மிகப்பெரியளவில் மதிப்பிடப்பெற்ற தமிழ், ஆங்கில நூல்கள் ஏட்டு வடிவில் கல்லூரிக்கு கிடைக்கப்பெற்றன. சைவப் பெரியார்கள் பலர் இங்கு ஆசிரியர்களாக பணிபுரிந்தனர். அவர்களுக்கு மத்தியில் காவியுடையணிந்த, குழந்தை உள்ளம் கொண்டவராகத் திகழும் உருத்திர கோடிசுவரர் எனும் துறவியர் ஒருவர் விடுதிச் சாலையில் வசித்து, சைவம் போதித்து வந்தார்.

பரமேசுவராக் கல்லூரிக் கட்டடமானது மிக அழகானதாகவும், உறுதியானதாகவும், போதியளவான அகலம் நீளம் கொண்டதாகவும் அமைக்கப்பட்டவையாகும். தேக்கு மரங்களைப் பயன்படுத்தி மேல்மாடிக்கட்டட அமைப்புக்களும்மிகஅருமையாகவடிவமைக்கப்பட்டிருந்தது. இவை இன்றும் உறுதியாக நிலைத்து காணப்படுவதுலிருந்து, அக்காலத் தொழிநுட்பத்திறனின் சிறப்பை அறிய முடிகிறது. இக்கல்லூரி தோற்றம் பெற்றபோதே பிரார்த்தனை மண்டபமும் இம்மேல் மடியில் அமைக்கப் பெற்றிருந்தது. இங்கு ஐம்பொன்னாலான சோமசுகந்த மூர்த்தியை பரமேசுவரராக நிலைப்படுத்தியிருந்தனர். அவருக்கு காலை, மாலை பூசனைகள் செய்வதற்காகவே சரவணபவன் எனும் சிவபூசகர் ஒருவரும் பணியாற்றி வந்தார்.

இங்கு பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தது. தூய உடை தரித்து, திருநீறு பூசி, சந்தனம் பொட்டிட்டு வருதல் என்பது இறுக்கமான கட்டுப்பாடாக இருந்தது. காலையில் மாணவர்கள் அனைவரும் மேலுள்ள பிரார்த்தனை மண்டபத்தில் ஒன்று கூடி, பரமேசுவரப் பெருமானை வழிபட்டு திருமுறை பாராயணங்கள் மேற்கொள்ளல் வழமைக்குட்படுத்தப்பட்டிருந்தது. மாணவர்கள் மனங்கொண்டு திருமுறை ஓதுவதற்காக திருமுறை பாடல்களைத் தொகுத்து, ஓர் தொகுப்பு நூலாக இராமநாதன் ஐயா வழங்கியிருந்தார்.

**“பரம் பரஞ்சோதி பரனே போற்றி**
**சிந்தனைக் கரிய சிவமே போற்றி**
**நித்தா போற்றி நிமலா போற்றி**
**அருவமும் உருவமும் ஆனாய் போற்றி**
**அடியொடு நடு ஈறானாய் போற்றி**
**வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி**
**வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி**
**தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி**
**நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி**
**பாரிடை ஐந்தாய்ப் பாந்தாய் போற்றி**
**மூவா நான் மறை முதல்வா போற்றி**
**உரையுணர் விறந்த ஒருவ போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**
**படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி**
**இடரைக் களையும் எந்தாய் போற்றி**
**தொழுவார் மையல் துணிப்பாய் போற்றி**
**அலந்தேன் நாயேன் அடியேன் போற்றி**
**தளர்ந்தேன் அடியேன் தமியேன் போற்றி**
**மருவிய கருனை மலையே போற்றி**
**அஞ்சேல் என்றிங் கருளாய் போற்றி போற்றி”**

எனத் திருவாசகத்தில் வரும் போற்றித் திருஅகவலின் சில அடிகளையும் அந்நூலில் இணைத்திருந்தார். இவ்வாறமைந்த தொகுப்பில் ஐம்பெரும்புராணம் (பஞ்ச புராணம்), சிவபுராணம் முதலியனவும் பாடப்பெறும். இறுதியில் **“நாதவிந்து சலா தீதமோ நம”** எனத் தொடங்கும் திருப்புகழும் பாடப்பெறும். இங்கு மாணவர்கள் பண்ணோடு பாடுவதற்கு அடியெடுத்துக் கொடுப்பதற்க்காகவே தமிழ்நாடு இராமநாதபுரத்து ஓதுவார் குடும்பத்தைச் சேர்ந்த முத்துக்குமாரசுவாமி ஓதுவார் இங்கு நீண்ட காலமாக பணியாற்றி வந்தார்.

பிரார்த்தனை மண்டபத்தில் எழுந்தருளியிருந்த பரமேசுவரப் பெருமானுக்கு ஆண்டுதோறும் ஆறுமுறை திருமஞ்சன வழிபாடுகள் தவறாமல் இடம்பெறும். விசேட வழிபாடுகளான நாயன்மார்கள் குருபூசைகள், சிவனிரவு வழிபாடுகள், ஒன்பனிரவு (நவராத்திரி), திருவெம்பாவை முதலியன சிறப்பாக நடைபெறும். இந்நாட்களில் பழனி ஐயமுது (பஞ்சாமிர்தம்) முக்கிய இடம்பெறும். இதற்கென பலரும் கூட்டமாக வளவில் வானுறவோங்கி வளர்ந்திருந்த தேக்க மரத்திலைகளை கழுவிக் கையிலேந்திய வண்ணம் வரிசை கட்டுவார்கள். இவ்வாறான நாட்களில் சேர். பொன். இராமநாதன் ஐயா அவர்கள் சைவச் சிந்தனைகளை உரையாக வழங்குவார். **“அன்ன யாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்”** என்ற பாரதியார் வாக்கிற்கிணங்க, அவர் வழங்கி வந்த கல்விச் சேவையில் எள்ளளவிலும் குறைவைக்கவில்லை.

இவ்வாறு நிலவிய காலத்தில், இலண்டன் பல்கலைக் கழகத்தின் இன்ரர்ஆர்ஸ், இன்ரர்சயன்ஸ், பி.ஏ, பி.எஸ். சி போன்ற பரீட்சைகளுக்கு ஆயுத்தம் செய்யும் வாய்ப்பு வசதிகள் பரமேசுவரக் கல்லூரிக்கு வந்தது. இதுவே பிற்காலத்தில் பரமேசுவராக் கல்லூரி பல்கலைக்கழகமாக மாற உந்துதலாக அமைந்தது. எனினும் இக்கல்லூரி அக்காலத்தில் பல்கலைகழகம் போல் விளங்கியது எனவும் சொல்லலாம். அங்கே ஒருபுறம் சித்த ஆயுர் வேத மருத்துவ வகுப்புக்களும் நடைபெற்று வந்தது. நாளடைவில் பண்டிதர்களை உருவாக்கும் கலாசாலையாகவும் இது விளங்கியது. இதன்பயனாக வருடந்தோறும் முப்பதுக்கு குறையாதோர் பண்டிதர்களாயினர்.

இராமநாதன் ஐயாவின் பெரும் செலவிலமைந்த விஞ்ஞான



ஆய்வு கூடம் அன்று, இலங்கையில் முதல் தரமானதாயிருந்தது. ஆய்வுக்கு வேண்டிய உலோக வகைகள், உப்பு வகைகள், காடி வகைகள், கார வகைகள் பெருந்தெகையாய் இருந்தன. உலோக வகைகளுள் பெறுமதி வாய்ந்த தங்கம் மெல்லிய காகிதல் கனத்தில் கிடைத்தது. ஆய்வு கூடக்கருவிகள் யாவும் அணியணியாயிருந்தன, ஆய்வுக்கு உதவியாக உயிர் வாயுச்சாடிகளும் இருந்தன. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூ ரியின் பழைய மாணவரான தம்பு தடசணாமூர்த்தி என்பவர் ஆய்வு கூடப் பொறுப்பாளியாய் பணியாற்றினார். இலண்டன் இன்ரசயன்ஸ் வகுப்பும் இங்கே நடைபெற்றது. எல்லா வசதிகளும் ஒருங்கமைய உருவான பரமேசுவராக் கல்லூரி பிற்காலத்தில் இராமநாதன் இந்துப் பல்கலைக்கழகமாக நிலவலாம் என அறிஞர்கள் எதிர்வுகூறியதும் உண்டு.

ஆரம்ப காலத்தில் பரமேசுவராக் கல்லூரி மாணாக்கர் மூவேறு இல்லங்களாய் அணிவகுத்திருந்தார்கள். சந்திர இல்லம், சூரிய இல்லம், இந்திர இல்லம் என ஒரு காலத்தில் அவை இயங்கின. நாளடைவில் அவை பிரம்மா, விட்ணு, உருத்திரன், மகேசுவரன், சதாசிவன், பரமேசுவரன் என்னும் ஆறு இல்லங்களாய் அமைந்தன.

(05ஆம் பக்கம் பார்க்க)

# அருள்மிகு பார்வதி அம்மை உடனுறை பரமேசுவரப் பெருமான்...



(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவையனைத்தும் சேர். பொன். இராமநாதன் ஐயா அவர்கள் சகலத்துறைகளையும் சைவத்தினொடு ஒருங்கே கட்டியெழுப்ப செயற்பட்டுள்ளமையை உணர எடுத்துக்காட்டாய் அமைகிறது.

### பரமேசுவரர் திருக்கோயில் வரலாறு

பரமேசுவரப் பெருமானுக்கு திருக்கோயில் அமைத்து சிறப்பிக்க எண்ணினார் இராமநாதன் ஐயா அவர்கள். அவரின் விருப்பத்தின் பொருட்டு சைவப் பெரியோர்கள், சிவாச்சாரியார்கள் என பலரோடு கலந்துரையாடி, கோயில் கட்டுமானத்துக்கு தேவையான கருங்கற்களை வியாங் கொடையில் இருந்து கொண்டு வருவதற்கு ஏற்பாடுகளை உறுதிசெய்து கொண்டு, 1926 ம் ஆண்டு நல்லதொரு நாளில் திருக்கோயிலிற்கு அடிக்கல் நாட்ட திருவருள் பொருந்திய தீர்மானத்தை எடுத்தார்.

இவ்வாறு திருவருள் கூடிய நாளில் கல்லூரியே, வாழை தோரணங்களால் விழாக்கோலம் பூண்டு, ஆன்றோர்கள், பெரியோர்கள், சிவாச்சாரியார்கள், ஆலயப் பூசகர், அன்றைய அதிபர் சிவத்திரு. இராமநாதன் வாமதேவா (இராமநாதன் ஐயாவின் மகன்), ஆசிரியர்கள், மாணவர்கள் முதலானோர் தவறாமல் கலந்துகொள்ள, உரிய நல்வேளையில் சங்கு, சேமக்கலம், முழவம் என்பன முழங்க, திருமுறைவல்லார்கள் பண் தவறாமல் ஓதல் செய்ய, ஆசியர்கள், மாணவர்கள் **"ஓம் நமசிவாய"** என துத்திட, அருளாளர் இராமநாதன் **"பரமேசுவரா"** என உரக்கக்கூறி அடிக்கல்லை நிலைநாட்டினார்.

அன்று தொடக்கம் திருக்கோயில் கட்டுமான வேலைகள் சிறப்பாக தொங்கின. வியன்கொடையிலிருந்து கருங்கற்கள் புகையிரத பாதையருகே குவிந்தன. இரும்புச் சில்லுப் பூட்டிய வண்டிகள் வழியாக கோயிலை கற்கள் வந்தடைந்தன. சில்லு வண்டிகள் புதையுண்ட போது மாணவர்கள் குழுமமாய் வண்டியை இழுத்து வந்து சேர்த்த நிகழ்வுகளும் உண்டு. இவ்வாறு எந்தத் தடையுமின்றி திருக்கோயில் வேலைகள் சிறப்பாக இடம்பெற்று இரண்டு ஆண்டில் நிறைவு பெற்றது.

கோயில் பெருமளவில் சிற்ப ஓவிய வேலைப்பாடுகள் இல்லாவிட்டாலும் அம்சமான பெரிய கோயிலாக அமைந்தது. போதியளவு நீள அகலத்துடனான மண்டபத் துடன் கூடிய கோயிலாக திகழ்ந்தது. இருபக்கங்களிலும் பன்னிரண்டு தூண்களுடனும் அழகிய வளைவுகளுடனும் ஒடுக்கமான உள் வீதியோடும் சிறப்பாகக் காட்சி தந்தது.

### முதலாவது திருக்குடமுழுக்கு

பரமேசுவரர் திருக்கோயிலானது 1928ஆம் ஆண்டு ஓரளவிற்கு கட்டி முடிக்கப்பட்டு குடமுழுக்கிற்கு தயாராகியது. இராமநாதன் ஐயா அவர்கள் குடமுழுக்கை ஒட்டிய வேளையில், அரசியல் வேலையாக இங்கிலாந்து செல்ல நேரிட்டது. இதனால் தனது மகன் வாமதேவாவிடம் குடமுழுக்கு வேலைகளை ஒப்படைத்து விட்டு சென்றார். இத்திருக்குடமுழுக்கை ஆற்றுவதற்காக நல்லூர் கார்த்திகேய குருக்களையே அழைத்திருந்தார்கள். கிரியைகளின் பொருட்டு கார்த்திகேய குருக்கள் தேவையான பொருட்களுக்கான பட்டோலையை வாமதேவாவிடம் கொடுத்தார்.

அப்பட்டோலைக்கான செலவு மிக அதிகமாக இருந்ததால், வாமதேவா பின்வாங்கினார். இதனைத் தந்தை இடத்து தெரிவித்த போது, பதிலளித்த இராமநாதன் **"நாங்கள் இருபது இலட்சம் செலவளித்து பொன்னம் பலவாணேசருக்கு கோயிலெடுத்தோம். நாட்டில் நம்பிகள், நங்கைகள் பயில பள்ளிகள் அமைத்தோம். சிவபெருமான் எமக்கு அவர் அளித்த செல்வத்தில் அவர் பணி செய்ய நாம் எப்போது பின்வாங்கக்கூடாது"** என்றும் **"இறைபணி நிற்கும்போது தாராளமனப்பான்மை வேண்டும். முன்னைய சேர, சோழ, பாண்டிய, பல்லவ சென்ற வழியில் நாமும் சைவப் பண்பாடு நிலவச் செய்ய வேண்டும் அன்பு மகனே!"** என்று கூறி அருளினார். வாமதேவாவும் தந்தை சொல்லுக் கேற்ப அனைத்தையும் சீரும் சிறப்புமாக ஆயத்தப்படுத்தினார். குடமுழுக்கினை முன்னிட்டு சுண்ணாம்பு சுவர்களினாலே கருவறையினுள் ஏற்படும் வெப்பத்தை தணிக்க சந்தனக்கட்டைகள் அரைத்து பூசப்பட்டன.

1928ம் ஆண்டு திருவருள் கூடிய நன்னாளில், மண்பத்தின் உள்ளும் வெளியுமாக பல வேள்விக் குண்டங்களை அமைத்து, நகுலேசுவரக் குருக்கள், மாவிட்டபுரத்துக் குருக்கள், அச்சுவேலிக் குருக்கள், நீர்வேலிக் குருக்கள், திருநெல்வேலி சபா நடேசக் குருக்கள், குறுஞ்சிக் குருபாதக் குருக்கள் எனப்பாலரும் கலந்து சிறப்பிக்க, இராமநாதன் கல்லூரி ஆசிரியர் சிவத்திரு. கணபதி ஐயா அவர்கள் அருமையாக வீணையைத் தடவ, மாணாக்கர்களின் திருமுறை இசைக்குரலோடு திருப்பெருகு திருக்குடமுழுக்கு சீரும் சிறப்புமாக நடந்தேறியது. இராமநாதன் ஐயாவினுடைய கோட்பாட்டின் மையக்கருவான **"பரமேசுவரம்"** எனும் இறைவன் நிலைபெற்றார்.

இத்திருக்குடமுழுக்கை தொடர்ந்து மண்டலப் பூசைகள் இடம்பெற்று, இறுதிநாளில் மாணவர்களுக்காக மகேசுவர பூசையும் இடம்பெற்றது. திருக்கோயிலினுள் அனைத்து அடியார்களும் சென்று எம்பெருமானின் திருவருட் கோலத்தைக்கண்டு பூரிப்படைந்தனர். அன்று தொடக்கம் இன்று வரை பரமேசுவரப் பெருமான் வேண்டுவோர்க்கு வேண்டியதை தந்து அருளிக்கொண்டிருக்கின்றார்.

பரமேசுவரப் பெருமானும் இராமநாதரை கைவிடவில்லை. வேண்டிய அனைத்ததையும் கொடுத்து மேலும் மேலும் சிவத்திருப்பணிகள் செய்ய தூண்டிய வண்ணமே இருந்தார். இதனை **"சந்திரன் தேய்வதுண்டு, ஆம்பல் குவிவதுண்டு, இந்திரன் சாபம் பெற்றதுண்டு, இராமநாதனுக்கு ஏதும் குறைவில்லையே"** என்று அவ்வயூர் மு.செல்லையா புலவர் பாடியுள்ளார்.

### இரண்டாவது திருக்குடமுழுக்கும் "பரமேசுவரம்" மலர் வெளியீடும்

1930ம் ஆண்டு இராமநாதன் ஐயாவின் மறைவோடு பரமேசுவரர் கோயிலை, இராமநாதன் நம்பிக்கை நிதியம் பொறுப்பேற்றது. இராமநாதன் ஐயா கோயிலுக்கேன எழுதி வைத்த கிளிநொச்சி வயல் காணியின் வருமானத்தில் கோயில் இயங்கி வந்தது. இதனை கோயில் அர்ச்சகர் சரவணபவன் முன்னின்று நடத்தி வந்தார். இக்காலப்பகுதியில் தவத்திரு. யோகர் சுவாமிகளும் இக்கோயிலில் வழிபட்டு அர்ச்சகருடன் உரையாடும் வழமையை வைத்திருந்தாக அறியமுடிகிறது.

பின்வரும் காலங்களில் 1974ம் ஆண்டு பரமேசுவராக் கல்லூரி பல்கலைக்கழக வளாகமானது. இதனால் இக்கோயிலும் பல்கலைக் கழகத்தின் ஓர் அங்கமானது. இதனை கல்லூரி வளாகமாக மாறியபோது எடுக்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கை சுட்டிக் காட்டுகிறது. இவ்வறிக்கையில் கல்லூரியின் ஏனைய உடைமைகள் மதிப்பிடப்பட்டுக் கையேற்கப்பட்டது போன்று கோயிலின் கட்டிடம் தொட்ட உடைமைகள் வரை கையேற்கப்பட்டமை தெரிகிறது. இருந்தும், பல்கலைக்கழக அன்றைய நிருவாகம் இதனைப் பொறுப்பேற்காத நிலையில் இராமநாதன் நம்பிக்கை நிதியமே தொடர்ந்தும் இதனை நிருவகித்து வந்துள்ளதுமை குறிப்பிடத்தக்கது.

பின்னர் 1979ல் பல்கலைக்கழக வளாகமானது, பல்கலைக்கழகமாக விரிந்தது. இதன் பிற்பட்டக் காலப்பகுதியில் வரலாற்றுத்துறை தலைவரும், யாழ் பல்கலைக்கழக இந்துமாமன்ற பொருளாளரும் ஆன பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் அவர்களுடைய முயற்சியினால், இராமநாதன் நம்பிக்கை நிதியத்துடன் கலந்துரையாடி இரண்டாவது திருக்குடமுழுக்குக்கான தீர்மானம் எடுக்கப்பட்டது. அதன்படி, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் அருள்மிகு பரமேசுவரர் திருக்கோயிலில் நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் 1981-08-21 அன்று திங்கட்கிழமை பாலாலயம் (பாலஸ்தாபனம்) இடம்பெற்று திருப்பணிகள் தொடங்கியது.

விநாயகர், ஒன்பான்கோள்கள் (நவக்கிரகங்கள்), பைரவர், ஆதிதாசர் (சண்டேசுவரர்) ஆகியத் திருமுன்கள் வடிக்கப்பெற்று சந்நிதிகள் அமைத்து, எம்பெருமானுக்கு கோபுரத்துடன் கூடிய வசந்த மண்டபமும் அமைக்கப்பெற்றது. இத்தகைய திருப்பணிகள் யாவும் ஆலய இயக்குனர் சபை, துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துமன்றம், மற்றும் சைவ அன்பர்கள் ஆகிய அனைவரது கூட்டு முயற்சியின் வெளிப்பாடாகும். அருள்மிகு பரமேசுவரன் ஆலய இயக்குனர் சபை இக்கோபுர நிர்மாணத்திற்கும் மற்றும் திருப்பணிகளுக்கும் பெரிதும் உதவி நல்கினர். திருக்குடமுழுக்குத் திருப்பணி வேலைகள் ஒழுங்காக நடைபெறுவதைக் கண்காணிப்பதில் மன்றப்



பொருளாளர் கலாநிதி சி. க. சிற்றம்பலம் அதிக ஊக்கம் எடுத்தார். திருக்குடமுழுக்கு ஒழுங்குகள் எதுவிதத் தடையின்றி நடைபெற துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா அவர்களினதும் பேராசிரியர் கா. கைலாச நாதக் குருக்கள் அவர்களினதும் வழிகாட்டல் பெரிதும் துணை நின்றது. ஏனைய கைங்கரியங்கள் நிறைவேற இயக்குனர் சபையின் நல்லாதரவும் எமது பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களையும் சார்ந்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் மற்றும் பல்வேறு நிலை சார்ந்த உத்தியோகத்தர்கள் ஆகிய அனைவரது பங்களிப்பும் கிட்டின. இந்துமன்றம் தம் சகல நடவடிக்கைகளையும் ஒன்றிணைப்பதில் பெரும்பங்கு வகித்தது.

இத்திருப்பணி நிறைவு பெற்று, எம்பெருமானின் திருக்குடமுழுக்கு கிரியைகளானது 1991-05-29 அன்று தொடங்கி மூன்று நாட்கள் வேள்விகள் நடைபெற்று, 1991-06-02 அன்று (ஞாயிற்றுக்கிழமை) திருவருள் கூடிய நல்வேளையில், சீர்வளர்சீர் சுவாமிநாத பரமேசுவரக் குருக்கள் அவர்களினால் திருக்குட நன்னீராட்டுச் செய்து வைக்கப்பட்டது. பரமேசுவரப்பெருமானின் திருவருளால், சிற்றம்பலம் ஐயாவினுடைய முயற்சியும் கூடிய வேளையில் இரண்டாம் குடமுழுக்கு சீரும் சிறப்புமாக நிறைவேறியது. இத்திருக்குடமுழுக்கை தொடர்ந்து பன்னிரண்டு நாட்கள் மண்டலப் பூசைகள் நடைபெற்று, மண்டலபூர்த்தியை முன்னிட்டு 1991-06-14 அன்று சங்கு நீராட்டும் இடம்பெற்றது. இங்கு ஆறுமுநாவலர், இராமநாதன் ஆகியோரின் குருபூசைகள் நடைபெற்று வருகின்றமை சிறப்பாகும்.

இவ்விரண்டாவது திருக்குடமுழுக்குப் பெருவிழாவை



ஆவணப்படுத்தும் நோக்கோடு பேராசிரியர் சண்முகதாஸ் அவர்களின் முயற்சியில் வெளிவந்த சிறப்பு மலரே **"பரமேசுவரம்"**. இந்நூல் பரமேசுவரப் பெருமானின் திருப்பெயர் கொண்டமைந்ததால் இராமநாதன் ஐயாவின் கோட்பாட்டைக் காட்டி நிற்கிறது. இந்நூலானது பரமேசுவராக் கல்லூரியின் வரலாறு தொடக்கம் இரண்டாவது குடமுழுக்கு வரையான ஓர் ஆய்வு நூலக காணப்படுகின்றது. பேராசிரியர் சண்முகதாஸ் அவர்கள் சரியான முறையிலே, சரியானவர்களை அணுகி, அவர்களின் கருத்துக்கள் மூலம் யாழ் பல்கலைக்கழத்தின் வரலாற்றையே ஆவணப்படுத்தியுள்ளார். இந்நூல் யாழ் பல்கலைக்கழகம் பற்றி ஆய்வு செய்வோர்க்கு பெரிதும் உதவுகின்றது. நானும் இந்நூலை மூலமாகக் கொண்டே இக்கட்டுரையை எழுதியுள்ளேன் என்பதையும் கூறி மகிழ்கிறேன்.

### மூன்றாவது திருப்பணி

இற்றைக்கு பல்லாயிரக்கணக்கான பட்டதாரிகளை வாரியிறைத்துக் கொண்டிருக்கின்ற, யாழ் பல்கலைக்கழகத்தில் வீற்றிருக்கும் பரமேசுவரப் பெருமான் போற்றுதலுக்குரியவர். இப்போற்றுதலுக்குரிய பரமேசுவரப் பெருமான் திருக்கோயிலானது, மூன்றாவது குடமுழுக்கை முன்னிட்டு ஆறு கோடி நிதிச் செலவிலான திருப்பணிக்கு உட்படுத்தப்படுத்தபட்டிருந்தது.

இத்திருப்பணியின் வாயிலாக புதிய அம்மன் சந்நிதியும், ஒன்பான்கோள்கள் (நவகிரகங்கள்), பைரவர் ஆகிய திருமுன்கள் புத்தெழில் கோலத்தோடும் கூரை உட்பட புனரமைப்பிற்கு உட்படுத்தப்பட்டு, பரமேசுவரப் பெருமான் திருக்கோயிலானது பழமையும் புதுமையும் இணைந்த பண்பாட்டை பறைசாற்றி மிளிர்கின்றது. இத்திருப்பணிக்கான நிதியினை, இராமநாதன் நம்பிக்கை நிதியத்துடன் யாழ் பல்கலைக்கழகத்தினுடைய பணியாளர்கள் அனைவருமாக இணைந்து வழங்கியுள்ளமை, இராமநாதன் ஐயா அருவமாக இருந்து இன்றும் இவர்களை ஆற்றுப்படுத்திடுகின்றார் என்பதை உணர்த்தி நிற்கின்றது!

**"இந்தியாவின் காசியிலுள்ள இந்துப் பல்கலைக்கழகமும், காசி விசுவநாதர் கோயிலும் போல இவர் இங்கும் யாழ் பல்கலைக்கழகமும் பரமேசுவரன் கோயிலும் என உருவாக்கின்றார்"** என அன்றே சில ஆன்றோர்கள் அதிசயித்தனர். அவர்கள் கூற்று பொய்யாகாமல் மெய்யானது பரம்பொருள் திருவருளே!

**"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"**

**திருச்சிற்றம்பலம்**

**தகவல்கள் - "பரமேசுவரம்" குடமுழுக்குமலர்**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**தென்னாடு - செந்தமிழாகம சிவமடம்,**
**கொக்குவில், யாழ்ப்பாணம்.**
+94 21 221 2739 | nilavan@thennadu.org

# தருமை ஆதீன மீனாட்சிசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் யாழ் வருகை



யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை வருகை










யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வருகை










தம்பிரான் சுவாமிகளின் தென்னாட்டு வருகை




# தருமை ஆதீன மீனாட்சிசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் யாழ் வருகை


கீரிமலைத் தீர்த்தம்


அருள்மிகு மாவிட்டபுரம் கந்தசுவாமி திருக்கோயில்


நல்லை ஆதீன சுவாமிகளிடம் ஆசிபெறல்






சிவாகமக்கலாநிதி ஸ்ரீசிவஸ்ரீ நகுலேஸ்வர குருக்கள் அவர்களுடன்




கீரிமலை அருள்மிகு நகுலேச்சரம் திருக்கோயில்

# ஈழத்து சித்தர்கள்: தவத்திரு சித்தானைக்குட்டி சுவாமிகள்

(சித்தானைக்குட்டிச் சுவாமிகள் சென்ற திங்கள் தொடர்ச்சி)

### கன்னங்குடாவில் நடைபெற்ற பேரதிசயம்

கன்னங்குடாவைச் சேர்ந்த கந்தப்போடியார் சித்தானைக்குட்டிச் சுவாமிகளிடம் நீங்காத பத்தி உடையவர். தன்னையே முழுவதாகச் சுவாமிகளிடம் ஒப்புக்கொடுத்தவர். **“தந்தது உன்றன்னைக் கொண்டது என்றன்னை”** என்ற திருவாசகத்தின்படி சித்தானைக்குட்டி சுவாமிகளைத் தவிர வாழ்க்கையில் வேறு எதனையும் உயர்வாக மதியாது சித்தானைக்கடவுளேதான் தனது கடவுள் என உறுதி பூண்டவர்.

தம்மிடம் யார் அதிக பத்தி உடையவர்களாய் இருக்கிறார்களோ அவர்களைத்தான் சுவாமிகள் அதிக சோதனைக் குள்ளாக்குவார். அச்சோதனைகளில் தேறியவர்களுக்குத் தனது சத்தி முழுவதையுமே ஈந்துவிடுவார். கந்தப்போடியாரின் மிகுந்த அன்புள்ள மனைவியாருக்கு ஒரு சுகவீனம் ஏற்பட்டது. பல வைத்தியர்கள் மருந்து செய்தும் நீங்காத நோயாக இருந்தது. கந்தப்போடியார் சுவாமிகளிடம் முறையிட்டார். “அது ஒன்றும் செய்யாதடா, பயப்படாதே” என்று சுவாமிகள் கூறினார்கள். கந்தப்போடியார் சுவாமிகளைப் பூரணமாக நம்பியவர் ஆனபடியினால் மனைவியாரின் நோயைப்பற்றிக் கவலை ஒழித்து வாழ்ந்தார்.

அம்மையாரின் நோய் சிறிது தணிந்ததுபோல் காணப்பட்டது. ஒருநாள் திடீரென நோய் உச்சக் கட்டத்தை அடைந்தது. அன்று மாலை ஏழு மணிக்கு அம்மையாரின் உயிர் பிரிந்தது. எதுவரினும் சித்தானைதான் கதி என்று வாழ்ந்த கந்தப்போடியாரின் மனதில் ஒரு திடம் ஏற்பட்டது. தான் வரும்வரை எவரும் அழவேண்டாம் சடலத்தை தீண்டவும் வேண்டாம் என்று உறவினரிடம் கட்டளை யிட்டுவிட்டு, உடனே தோணி ஏறி வாவியின் அக்கரை சேர்ந்து, மோட்டார் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி 26 மைல் தூரமான காரைதீவை அடைந்தார். இவர் செல்லும்போது இரவு 10 மணிக்கு மேலாகிவிட்டது. சென்றதும் சித்தானைக்குட்டிகளின் காலைப்பிடித்து அழத் தொடங்கினார். முதலில் கந்தப்போடியாருக்கு அடியும் உதையும்தான் விழுந்தன. மிக முரட்டுத்தனமாகவும் கடுமையாகவும் நடந்து கொண்டார் சுவாமிகள். கந்தப்போடியார் சுவாமிகளின் காலடியிலேயே தமது உயிரை மாய்த்துக் கொள்வதாகக் கங்கணம் கட்டிக் கொண்டார்.

பரீட்சையில் கந்தப்போடியார் வென்றுவிட்டார் என்றே சொல்ல வேண்டும். சுவாமிகள் போவதற்குச் சம்மதித்து விட்டார்கள். மோட்டாரில் ஏறிக்கொண்டார்கள். மோட்டார் வாவிக்கரையை அடைந்தது. சுவாமிகள் கீழே இறங்க மறுத்துவிட்டார். கால் நிலத்தில் படலாகாது என்று சொல்லிவிட்டார். 4,5 பேராகச் சேர்ந்து தூக்கிச் சென்று வள்ளத்தில் வைத்தனர். வள்ளம் அக்கரையை அடைந்தது. அக்கரையிலிருந்து கந்தப்போடியார் வீடுவரை தூக்கிச் சென்றனர். இரண்டாவது பரீட்சையிலும் கந்தப்போடியார் சித்தி பெற்றுவிட்டார்.

அந்தக் கிராமம் முழுவதுமே அங்கு திரண்டிருந்தது. அழுகை ஒலி ஒரே அல்லோலகல்லோலமாகக் காணப்பட்டது. கையோடு கொண்டு வந்த விபூதியை நெற்றியில் சுவாமிகள் வைத்து “என்ன அம்மா இன்னுந் தூக்கமா?’ என்றார்கள். என்ன ஆச்சரியம்! அம்மையார் துடிதுடித்து எழுந்தார்கள். சுற்றுமுற்றும் பார்த்தார்கள். ஊரே திரண்டிருந்தது. அதிர்ச்சியடைந்து பார்த்தார்கள். கூடியிருந்தவர்களுக்குமே பேராச்சரியம். மாண்டவர் மீண்டால் யார் தான் ஆச்சரியப்படமாட்டார்கள்? அங்கிருந்தோரில் ஒருவர் ஆவேசம் வந்தவராய் சித்தானைக்குட்டி சுவாமிகளுக்கு அரோகரா என்றார். அங்கு கூடியிருந்த அத்தனை பேருமே ஊர் அதிரும்படி அரோகரா ஒலியை எழுப்பினார்கள். அழுகை ஒலி மாறி 5, 10 நிமிடங்களுக்கு ஒரே அரோகரா ஒலியாக மாறியது.

### ஒரு சதம் பணத்தைப் பெற்றுக்கொள்ள ஆறு மாத காலமா?

1932ம் ஆண்டு மாசிமகம் அர்த்தோதய புண்ணிய காலமாகும். அன்றைய தினத்தில் கடலாடுதல் மிக விசேடமாகும். ஆசிரியர் பூபாலபிள்ளை அவர்கள் வீட்டில் கிடைத்த ஒரு சதத்துடன் கடலாடச் சென்றிருந்தார். கடலில் ஒரு சதத்தை எறிந்துவிட்டுத் தீர்த்தமாட வேண்டுமெனச் சென்ற ஆசிரியர், தீர்த்தமாடிவிட்டு ஒரு சதத்தை எறிய மறந்து வேட்டியில் முடிந்தபடியே வீடு திரும்பினார். ஆசிரியர் அவர்கள் பாடசாலைக்குச் செல்லும் வழியில் சுவாமிகள் நின்றார்கள். இவரைக் கண்டதும் இன்று நல்ல புண்ணிய காலம் ஏதாவது தருமம் செய்யுங்கள் என்றார். அப்பொழுதுகூட ஆசிரியருக்குத் தமது முடிச்சில் இருக்கும் பணம் பற்றி நினைவு வரவில்லை. தெருவில் வருபவர்களிடம் கைநீட்டி வாங்கி ஆசிரியரிடமே கொடுத்தார்கள். கொடுக்கும்போது, அரிசிக்காறி பின்னேரம் வருவாள். 16 சதம் கொடுக்க வேண்டும் என்று கூறுவார். அப்போ கையில் 15 சதம் இருக்கும். வருகிறவர்கள் எல்லாரிடமும் பெற்றுப்பெற்று ஆசிரியரிடமே கொடுத்தார்கள். அரிசிக்காறி வருவாள் அப்பக்காறி வருவாள். 23 சதம் கொடுக்க வேண்டும் என்று கூறுவார். அந்த நேரத்தில் கையில் 22 சதம் இருக்கும். சுவாமிகள் தானும் பாடசாலைக்கு வருவதாகக் கூறி ஆசிரியரையும் அழைத்துக் கொண்டு சென்றார். செல்லும்போது அகப்பட்டவர்களிடமெல்லாம் பணம் வாங்கினார்.



ஆசிரியர் கையில் 75 சதம் இருக்கும்போது 76 சதம் தேவை என்பார். கையில் 80 சதம் இருக்கும்போது 81 சதம் தேவை என்பார். இத்தனை திருவிளையாடலும் இத்தனை ஒரு சதக் கணக்கும் ஆசிரியர் முடிச்சிலிருக்கும் ஒரு சதத்திற்காக என்பதை ஆசிரியர் அறியார். பாடசாலைக்குக் கிட்டச் சென்றதும் ஆசிரியரிடமிருக்கும் பணம் முழுவதையும் கொடுக்குமாறு கட்டளை பிறந்தது. கையிலிருந்த பணம் முழுவதையும் ஆசிரியர் கொடுத்தார். சுவாமிகள் கையிலிருந்த பொல்லைத் தூக்கி, பணம் கொடுக்க மாட்டாயா?” என்று கேட்டபோதுதான் ஆசிரியருக்குத்தான் முடிந்து வைத்திருந்த ஒரு சத நினைவு வந்தது. அப்போ ஆசிரியருக்கு வெட்கமும் துக்கமும் உண்டானது. “சுவாமி பாடசாலைக்கு வாருங்கள் பணம் தருகிறேன்” என்று ஆசிரியர் அழைத்தார். சிறிது நேரம் கழித்து வருவதாகக் கூறிச் சுவாமிகள் வந்தவழியே திரும்பி விட்டார்கள்.

ஆசிரியர் தேநீர்க் கடையொன்றில் ஒரு ரூபா கடனாகப் பெற்று சுவாமிகளுக்குக் கொடுக்க என்று ஒரு ரூபா ஒரு சதம் முடிந்து வைத்திருந்தார். அன்று முழுவதும் சுவாமிகள் வரவே இல்லை. இப்பணத்தை சுவாமி கேட்கும்போதுதான் கொடுப்பது என்று வைராக்கியத்துடன் அப்பணத்தை வேட்டியில் முடிந்து கொண்டே திரிந்தார். நாட்கள் கடந்து வாரங்களாகி வாரங்கள் கடந்து மாதங்களாகி மாதங்களும் 6 கடந்து விட்டன. அப்பணம் ஆசிரியருடைய வேட்டியின் முடிச்சிலேதான் இருந்தது. ஒருநாள் ஆசிரியர் தமது தாயாரைப் பார்க்கச் சென்று கொண்டிருந்தார். அப்போ தற்செயலாகச் சுவாமிகள் எதிர்ப்பட்டார்கள். சுவாமிகள் உடனே எனது பணத்தை இவ்வளவு காலத்துக்கும் வைத்துக் கொண்டு தராதிருக்கிறாய். நான் எவ்வளவு துன்பப்படுகிறேன்” எடு என்றார். ஆசிரியரும் முடிச்சை அவிழ்த்து ஒரு ரூபாய் ஒரு சதத்தைச் சுவாமிகளிடம் கொடுத்தார். சுவாமிகளும் புன்முறுவலோடு பெற்றுக் கொண்டார்.

சுவாமிகள் சித்தே உருவானவர்கள். சித்து என்பது அவரது இயல்பு. அவரது வாழ்க்கை முழுவதுமே சித்தாக நிறைந்திருந்தது. சித்துக்கள் நிறைந்த ஆனைதானே. அவற்றை எல்லாருக்கும் வெளிக்காட்டுவதில்லை. தன்னை ஒரு தூர்த்தன் போலவும், மிக வறியவன் போலவும் கையாலாகாதவன் போலவும், காட்டுவதே ஒரு சித்துத்தான். சித்தே உருவான ஒரு பொருளைச் சித்தில்லாதது போல் காட்டுவதும் ஒரு சித்தேதான்.

ஆசிரியர் பூபாலபிள்ளை அவர்களுடன் பேசிக் கொண்டிருகும்போது ஒருநாள் சுவாமிகள், திடீரென “மகனே! நாளை இரவைக்கு உமது மகளுக்குத் திருமணம் முடியப் போகிறது” என்றார்கள். இது எப்படி என்று ஆசிரியர் பலவிதமாக யோசித்தார். வழி ஒன்றும் தென்படவில்லை.

ஆசிரியர் குருநாதரிடமிருந்து வீடு திரும்பிக் கொண்டிருக்கும்போது பின்னால் ஒருவர் கைதட்டி அழைத்தார். உமது மூத்த மருமகன் என்னை அனுப்பினார். விவாகம் ஒன்று பொருந்தி இருப்பதாகவும் நாளை இரவைக்கே பதிவையும் சீதன எழுத்தையும் வைத்துக் கொள்ளலாம் என்றுங் கூறினார். நின்ற நிலையிலேயே சம்மதத்தைத் தெரிவித்து ஆளை அனுப்பிவிட்டு ஆசிரியர் வீடு சென்றார். வீடுசென்றவர் குருநாதருடைய சொற்களை வேத வாக்காகக் கொண்டு திருமணத்திற்கான ஆயத்தங்களைச் செய்யலானார். விவாகப் பதிவுக்கு என்று வந்தவர்கள் விவாகத்தையே செய்துவிட்டால் என்ன என்று அபிப்பிராயப்பட்டார்கள். நிறைவேறியது. எவ்வித தடையுமின்றி விவாகமும் நிறைவேறியது.

சித்தானையின் பத்தர்களுக்கு மலைபோல் வினை வந்தாலும் அவர்கள் சித்தானையை மனதில் தியாளித்துக் கற்பூரம் கொளுத்தி வழிபாடு ஆற்றுவார்கள். வந்த வினை அணுப்போல் கரைந்து விடுவதைச் சொந்த அனுபவங்களிலே உணர்ந்திருக்கிறார்கள். சித்தானையிடத்து அவர்கள் நேராகச் செல்ல வேண்டும் என்பதில்லை. தாம் இருக்குமிடத்தில் இருந்தே மனதில் தியாளிப்பார்களானால் அவரது திருவருள் கிட்டிவிடும்.

### தீப்பிடித்த கதிர்காமத் திரையைக் கல்முனைச் சந்தியில் நின்று கசக்கி அணைத்த புதுமை

ஒருநாள் சித்தானைக்குட்டிச் சுவாமிகள் கல்முனைச் சந்தியில் தெரு ஓரத்தில் உட்கார்ந்து இருந்தார்கள். சில அடியார்கள் சுவாமியைச் சூழ நின்றார்கள். சுவாமி முன்னிலையில் ஒரு அமைதி காணப்பட்டது. திடீரென உடுத்திருந்த வேட்டியை உரிந்து கசக்கிக் கொண்டிருந்தார். கூடநின்றவர்கள் ஆச்சரியமாகப் பார்த்தார்கள். “என்னடா பார்த்துக்கொண்டு நிற்கிறீர்கள்! கதிர்காமத் திரை தீப்பிடித்து எரிகிறது. கசக்கி அணையுங்களடா!” என்றார். இதை அணைப்பது எவ்வளவு கடினம் தெரியுமோ என்று கூறினார். கூடநின்றவர்களுக்கு இதன் அர்த்தம் புரியவே இல்லை. அடுத்தநாள் கதிர்காமக்கோயில் திருவிழாவில் பங்குபற்றிய ஒரு அன்பர் வந்து நேற்றைக்கு இத்தனை மணிக்கு கதிர்காமத்திரையில் தீப்பிடித்து எரிந்தது. உள்ளே நின்றவர்கள் நிலைகுலைந்து அங்குமிங்கும் ஓடினார்கள். ஒருவராவது அணைக்க முன்வரவில்லை. எங்கிருந்தோ சித்தானைக்குட்டி சுவாமிகள் ஓடி வந்து அதனைக் கசக்கி அணைத்தார்கள். நெருப்போடு மிகப் போராடினார்கள். சுவாமிகள் தகுந்த சந்தர்ப்பத்தில் வந்திருக்காவிட்டால் என்ன நிகழ்ந்திருக்குமோ என்று கற்பனை பண்ணிக்கூட பார்க்க முடியவில்லை என்று அந்த அன்பர் கூறினார். முதல்நாள் கல்முனைச் சந்தியில் சுவாமியைச் சந்தித்தவர்கள் சுவாமியின் மகிமையை ஓரளவு உணரத் தலைப்பட்டார்கள்.

### கதிர்காமக் காட்டில் வழிதப்பியவர்களுக்கு வழிகாட்டிய குருநாதர்

சுவாமிகள் தமது குத்தகைக்காரர் வைரமுத்து பத்தன் ஒருவனுடைய வீட்டிற்கு அடிக்கடி செல்வது வழக்கம். ஒருநாள் அப்பத்தனோடு உரையாடிக் கொண்டிருக்கும்போது திடீரென்று மூர்ச்சை போட்டு விழுந்து விட்டாராம். பத்தன் பயந்தே போய்விட்டார். டாக்டர் அழைக்கப்பட்டார். அரைமணி நேரத்தில் சுவாமிகளுக்குச் சுயஉணர்வு வந்தது. சுவாமிகள் படுக்கையில் இருந்து எழும்பும் போதே “இந்தக் கந்தன் வைத்தியன் பிள்ளைகுட்டிகளுடன் கதிர்காமம் சென்றானே. வழிதப்பி யானைக்காட்டில் திரிகிறான். நான் போய் வழியில் திருப்பிவிட்டு வந்தேன்” என்று கூறினார். அங்கிருந்தவர்கள் எவருக்காவது சுவாமி என்ன கூறினார் என்பது விளங்கவில்லை.

மூன்றாம் நாள் கந்தன் வைத்தியர் கதிர்காமத்தால் வந்து தமது அனுபவத்தைக் கூறினார். திசைமாறிக் காட்டில் அலைந்த போது தான் குருநாதனை நினைந்ததாகவும் அவர் உடனே தோன்றி வழிகாட்டி மறைந்து விட்டதாகவும் கூறினார். அப்போதான் அங்கிருந்தவர்களால் சுவாமியின் செயற்கரிய செயலை உணரமுடிந்தது.

### அமிர்தகளியில் அமர்க்களம்

அமிர்தகளித் தலத்தில் ஆடி மறைமதிக்கு (அமாவாசை) விசேட தீர்த்தத் திருவிழாவிற்குக் கிழக்கு மாகாணத்து மக்கள் முழுப்பேருமே திரண்டு வருவர். ஒருமுறை சில அன்பர்கள் சுவாமிகளுடன் செல்வதற்குத் திட்டமிட்டனர். தொண்டர் கந்தப்பர், அவரது தந்தையார், செல்லத்துரை வண்ணக்கர், வேலுப்பிள்ளைச் சாமியார், மயிலன் பரிகாரியார் ஆகியோர் சுவாமிகளுடன் சேர்ந்து பி.ப. 4 மணிக்குப் புறப்படுவதாகத் திட்டம் இட்டனர். குறிப்பிட்ட நேரத்திற்கு எல்லாரும் வந்து சேர்ந்து விட்டனர். சுவாமிகளோ செல்லத்துரை வண்ணக்கருடைய துடையில் படுத்து குறட்டை விட்டுக் கொண்டே தூங்கி விட்டார்கள். பல மணிநேரம் கழிந்துவிட்டது. எல்லாரும் ஏமாந்தார்கள். ஒருவரும் செல்லவில்லை.

சுவாமிகளும் எழுந்து சென்று வீட்டின் உள்ளே படுத்துக் கொண்டார்கள். அமிர்தகளியிலிருந்து அடுத்த நாள் வந்த காரைதீவு மக்கள் “இந்த கள்ளச் சாமி இந்த முறை அமிர்தகளியில் நல்ல பாடம் படித்தார். நேற்றைக்கு எத்தனை பெண்களுடைய சீலையைப்பிடித்து இழுத்து அடிவாங்கினார். இவர்களெல்லாம் சாமியா? இனிமேலாவது திருந்தி நடக்கட்டும்” என்று கூறினார்கள். நான் மாத்திரம் அந்த நேரத்தில் நில்லாதிருந்தால் சாமியை உடனே கொன்றிருப்பார்கள். நான் முன்நின்று ஒரு மாதிரி விலக்கி விட்டேன்” என்றெல்லாம் கூறினார்கள். சுவாமிகளின் திருவிளையாடல்களைக் காணும்போதும் கேட்கும்போதும் நாம் கண்டதும் கேட்டதும் பொய் எனவே நினைக்கத் தோன்றுகிறது. கண்ணால் கண்டதும் பொய் காதால் கேட்டதும் பொய் தீர விசாரித்து அறிந்ததே மெய் என்பதற்கு இலக்கியமாக விளங்கின சுவாமிகளின் திருவிளையாடல்கள்.

தொண்டர் கந்தப்பர் ஒருநாள் காலை ஐந்தரை மணி சுவாமிகளுடன் உலாவச் சென்றார். உலாவிவிட்டுக் கடற்கரையில் மலங்கழித்துவிட்டு கால் கழுவுவதற்காகக் கடலில் இறங்கினர். இரண்டு மைல் தூரம் வரை நடந்தும் கால் கழுவுவதற்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. கந்தப்பருக்குப் பயம் தொட்டு விட்டது. சுவாமிகள் திரும்பிப் போவோம் என்று கூறினார். இருவரும் கரைநோக்கித் திரும்பி வந்தனர்.

கரையேறியதும் தண்ணீர் நிறைந்திருப்பதைக் கண்டனர். சுவாமிகள் அந்த நேரத்தில் ஏதோ தனக்கு விளங்காத மொழியில் பேசினதாகக் கந்தப்பர் கூறினார்.

(சித்தனைக்குட்டிச் சுவாமி மீண்டும் வருவார்.)


திருச்சிற்றம்பலம்

ஆக்கம் : ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள்
தொகுப்பு : சிவத்திரு.வடிவேலு கங்காளன்

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று:

# எம்பிரான் திருஞானசம்பந்தன்





### அப்பர் பெருமான் திருக்கதவு திறக்கப்பாட, சம்பந்தர் பெருமான் திருக்கதவு திறத்தலும் மூடலுமாக இருக்கப் பாடியருளியமை

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும், திருநாவுக்கரசு நாயனாரும், சிலநாட்கள் சென்றபின், திருவீழிமிழலையை அகன்று திருவாஞ்சியம், திருத்தலையாலங்காடு, திருப்பெருவேளூர், திருக்கரவீரம், திருவிளமர், திருவாரூர், திருக்காறாயில், திருத்தேவூர், திருநெல்லிக்கா, திருக்கைச்சினம், திருத்தெங்கூர், திருக்கொள்ளிக்காடு, திருக்கோட்டூர், திருவெண்டுறை, திருத்தண்டலைநீணெறி, திருக்களர் முதலிய தலங்களை வணங்கிக் கொண்டு, வேதாரணியம் என்று சொல்லப்பட்ட திருமறைக்காட்டை அடைந்தனர்.

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் திருமறைக் காட்டிலுள்ள ஈசன் திருக்கோயிலின் உட்சென்று, திருச்சுற்றினை வலம் வந்தனர். சந்நிதிக்கு நேரே அவர்கள் வந்தபோது, உட்கோயிலின் கதவுகள் காப்பிட்டிருப்பதைக் கண்டனர். கதவம் காப்பிட்டிருப்பதன் காரணத்தைச் சம்பந்தர் அடியார்களிடம் கேட்டார். அவர்கள், **"வேதங்கள் வழிபட்டதன் பின் அடைத்துச் சென்ற அக்கதவைத் திறக்கும் அன்புடைய மறையோர் எவரும் வந்து திறக்காததால் கதவம் மூடிய படியே உள்ளது"** என்றும், **"உட்கோயிலின் வடக்குத் திசையில் ஒரு வாயில் அமைத்துக்கொண்டு அன்பர்கள் அதன் வழியே சென்று வழிபட்டு வருகின்றனர்"** என்றும் கூறினார்.

சம்பந்தர் இதனைக் கேட்டு வியப்புற்று அப்பரை நோக்கி, **"அப்பரே! நேர்வாயிலைத் திறந்து உட்சென்று மறைவனத்து உடையவரை நாம் வழிபடவேண்டும். ஆதலின், தாங்கள் இத்திருக்காப்பு நீங்குமாறு பாடியருளுங்கள்"** என்று வேண்டினர். அப்பர் பெருமானும், **"பண்ணினேர் மொழி"** எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடினார். பத்துப் பாடல்கள் பாடியும் திருக்கதவம் திறந்த பாடில்லை. சிந்தை நொந்த நாவரசர் நிறைவுப் பாடலாக,

**"அரக்கனை விரலால் அடர்த்திட்ட நீர்**
**இரக்கம் ஒன்றிலீர் எம் பெருமானீரே**
**சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ**
**சரக்க விக்கதவந் திறப்பிம் மினே"** - எனப் பாடினார்.

திருக்கதவம் திறந்தது. உடனே சம்பந்தரும் அப்பரும் நிலத்தில் வீழ்ந்து வணங்கினர். இருவரும் மறைக்காட்டு மணவாளன் முன் சென்று பதிகங்கள் பல பாடித் துதித்து, வழிபட்டனர். அடியார்களும் உடன் சென்று சுவாமியை வழிபட்டு மகிழ்ந்தனர். திருநாவுக்கரசர் சம்பந்தரை, இக்கதவம் மீண்டும் அடைக்கவும் திறக்கவும் இருக்குமாறு பாடவேண்டினார். திருஞானசம்பந்தர்,

**மதுரம் பொழில் சூழ்மறைக் காட்டுறை மைந்தா**
**இதுநன்கிறை வைத்தருள் செய்க எனக்குஉன்**
**கதவம் திருக்காப்புக் கொள்ளும் கருத்தாலே."** என்ற திருப்பாடலைப் பாடினார்.

தவக்குழந்தையார் பாடிய முதல் பதிகத்திலேயே கதவுகள் தாமே அடைத்துக் கொண்டன. அன்று தொடுத்து அந்தத் திருக்கதவு திறத்தலும் அடைத்தலுமாகிய வழக்கம் என்றும் நிகழ்ந்தது. அங்கே நிகழ்ந்த அற்புதத்தைக் கண்ட அடியார்கள் அனைவரும் ஆச்சரியங்கொண்டு, கண்ணீர்சொரிய நாயன்மார் இருவருடைய திருவடிகளிலும் விழுந்து போற்றி வணங்கினர். பிற பாடல்களையும் பாடிச் சம்பந்தர் பதிகத்தை நிறைவு செய்தார். இம் முதற்பாடல் தவிர்த்து, அந்தப் பதிகத்தின் பிற பாடல்கள் எதிலும் திருக்காப்புக் கொள்ள வேண்டி அவர் குறிப்பிடவில்லை. அதுவொன்றே முதற்பாடல் பாடியவுடன் கதவுகள் திறந்தன என்பதற்கான அகச்சான்றாகும்.

இந்நிகழ்வினை சேக்கிழார் பெருமகனார் திருஞான சம்பந்தர் புராணத்தில் மிக அருமையாகச் சொல்லிப் போகின்றார்.

**அரு மறைகள் திருக்காப்புச் செய்து வைத்த அக்கதவம் திறந்திட அம் மறைகள் ஓதும்**
**பெருகிய அன்புடை அடியார் அணைந்து நீக்கப் பெறாமையினால் அன்று முதலாகப் பின்னை**
**ஒரு புடை ஓர் வாயில் அமைத்து ஒழுகும் தன்மை உள்ளபடி கேட்டருளி உயர்ந்த சண்பைத்**
**திருமறையோர் தலைவர் வியப்பு எய்தி நின்று திருநாவுக்கரசருக்குச் செப்புகின்றார். 580**

**அப்பரே வேத வனத்து ஐயர் தம்மை அபிமுகத்துத் திருவாயில் திறந்து புக்கே**
**எப்பரிசும் நாம் இறைஞ்ச வேண்டும் நீரே இவ்வாயில் திருக்காப்பு நீங்கு மாறு**
**மெய்ப் பொருள் வண் தமிழ் பாடி அருளும் என்ன விளங்கு மொழி வேந்தர் அது மேற்கொண்டு**
**என்னை இப்பரிசு நீர் அருளிச் செய்தீர் ஆகில் இது செய்வேன் எனப் பதிகம் எடுத்துப் பாட. 581**

**பாடிய அப் பதிகப் பாட்டான பத்தும் பாடல் நிரம்பிய பின்னும் பைம் பொன் வாயில்**
**சேடு உயர் பொற்கதவு திருக் காப்பு நீங்காச் செய்கையினால் வாகீசர் சிந்தை நொந்து**
**நீடு திருக் கடைக் காப்பில் அரிது வேண்டி நின்று எடுக்கத் திருக்காப்பு நீக்கம் காட்ட**
**ஆடிய சேவடியார் தம் அடியார் விண்ணோர் ஆர்ப்பு எழுந்த அகிலாண்டம் அனைத்தும் மூழ்க. 582**

**மற்றது கண்ட போதே வாக்கின் மன்னவரை நோக்கிப்**
**பொற்புறு புகலி மன்னர் போற்றிட அவரும் போற்றி**
**அற்புத நிலையினார்கள் அணி திரு மறைக்காடு ஆளும்**
**கொற்றவர் கோயில் வாயில் நேர்வழி குறுகிப் புக்கார். 583**

**கோயில் உட்புகுவார் உச்சி குவித்த செங்கைகளோடும்**
**தாயிலும் இனிய தங்கள் தம்பிரானாரைக் கண்டார்**
**பாயும் நீர் அருவி கண்கள் தூங்கிடப் படியின் மீது**
**மேயின மெய்யர் ஆகி விதிர்ப்புற்று விரைவின் வீழ்ந்தார். 584**

**அன்பினுக்கு அளவு காணார் ஆனந்த வெள்ளம் மூழ்கி**
**என்பு நெக்கு உருக நோக்கி இறைஞ்சி நேர் விழுந்து நம்பர்**
**முன்பு நிற்பதுவும் ஆற்றார் மொழி தடுமாற ஏத்தி**
**மின்புரை சடையார் தம்மைப் பதிகங்கள் விளம்பிப் போந்தார். 585**

**புறம்பு வந்து அணைந்த போது புகலி காவலரை நோக்கி**
**நிறம் கிளர் மணிக் கபாடம் நீக்கமும் அடைப்பும் நிற்கத்**
**திறிந்தவாறு அடைக்கப்பாடி அருளும் நீர் என்றார் தீய**
**மறம் புரி அமணர் செய்த வஞ்சனை கடக்க வல்லார். 586**

**அன்று அரசு அருளிச் செய்ய அருமறைப் பிள்ளையாரும்**
**வென்றி வெள் விடையார் தம்மை விருப்பினால் சதுரம் என்னும்**
**இன் தமிழ்ப் பதிகப் பாடல் இசைத்திட இரண்டு பாலும்**
**நின்ற அக் கதவு காப்பு நிரம்பிட அடைத்ததன்றே. 587**

### அப்பர் பெருமானுக்கு இறைவனின் திருநடனத்தைக் காட்டியது

திருமறைக்காட்டு இறைவனை வழிபட்டபின் சம்பந்தரும் அப்பரும் திருமடத்திற்குத் திரும்பி வந்தனர். அன்றிரவு அப்பருக்கு உறக்கம் வரவில்லை. "சம்பந்தர் ஒரு பாடலைப் பாடியவுடன் கதவு மூடிக் கொண்டதே தாம் பல பாடல்களைப் பாடியதோடு இறைவனை இரக்கற்றமற்றவன் என்றும் கடிந்து கொண்ட பின்னல்லவா கதவு திறந்தது. நாம் இறைவன் திருவுளக் கருத்திற்கு எதிராகப் போய்விட்டோமோ?" என்றெல்லாம் எண்ணியவாறே உறங்கத் தொடங்கினார்.

அப்பர் பெருமானின் கனவில் தெய்வீக ஒளி ஒன்று தோன்றி "வாய்மூருக்கு வா" என்று அழைத்தது. விழித்தெழுந்த அப்பர், தன் முன் தோன்றிய ஒளியைப் பின்பற்றி வாய்மூர் சென்றார். அவ்வொளி ஒரு கோயிலினுள் சென்று மறைந்தது. கடவுளைக் காணாது திகைத்து நின்று தேடினார் அப்பர்.

திருமறைக்காட்டு மடத்தில் தம் உடனிருந்த அப்பர் பெருமானைக் காணாது அவரைத் தேடித் திருஞானசம்பந்தரும் வாய்மூருக்கு வந்தார். சம்பந்தரைக் கண்ட அப்பர், "திறக்கப்பாடிய என்னினும் செந்தமிழால் சிறப்பாகப் பாடி கதவம் அடைத்த சம்பந்தர் இதோ வந்துள்ளார். அவருக்கும் தாம் மறைந்திருப்பீரோ?" என்று பாடினார்.

அந்நிலையில் சம்பந்தருக்கு இறைவன் ஆடற்காட்சி காட்டினான். அக்காட்சியைச் சம்பந்தர் அப்பருக்கும் காட்டினார். அந்த அற்புதக் காட்சியைக் கண்ட அப்பர், "கண்டேன்! கண்டேன்" என்று மகிழ்ந்து பாடினார்.

திருச்சிற்றம்பலம்

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**தென்னாடு - செந்தமிழாகம சிவமடம்,**
**கொக்குவில், யாழ்ப்பாணம்.**
+94 21 221 2739 | nilavan@thennadu.org

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு கற்பகவல்லி உடனுறை சதுரங்க வல்லபநாதர் - திருப்பூவனூர்

## [தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 166 ஆவது திருக்கோயில் - திருப்பூவனூர்]

**ஆவின் மேவிய ஐந்தமர்ந்து ஆடுவான்**
**தூவெண்ணீறு துதைந்த செம்மேனியான்**
**மேவ நூல்விரி வெண்ணியின் தென்கரைப்**
**பூவனூர் புகுவார் வினை போகுமே.**

பால், தயிர், நெய், கோசலம், கோமயம் எனும் ஆவினுடை(பசு) ஐவகை திரவியங்களை விரும்பித் திருமுழுக்குக் கொள்பவனும், தூய வெண்ணீறு செறிந்த செம்மேனியனும், விரிகின்ற பூணூல் மேவியவனும் என அப்பர் பெருமானால் போற்றிப் பாடப்பட்ட, கற்பகவல்லி உடனுறை சதுரங்க வல்லபநாதர் உறையும் பதியே பூவனூர்த் திருத்தலமாகும். சதுரங்கத்தில் வல்லபம் கொண்டு, இறைவன் உமாதேவியாரை கரம்பற்றிய தலமும் இதுவாகும்.

**அமைவிடம்: திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு**

நீடாமங்கலம் - மன்னார்குடி செல்லும் பேருந்தில் ஏறிப் பூவனூர் நிறுத்தத்தில் இறங்கி, பாமிணி ஆற்றைக் கடந்து சிறிது தூரத்தில் கோயிலை அடையலாம். நீடாமங்கலத்திற்கு தென் மேற்கே 9 கி.மீ தொலைவு. மன்னார்குடி - அம்மாப்பேட்டை, வலங்கைமான்- மன்னார்குடி பேருந்துகளும் பூவனூர் வழியாக செல்கின்றன.

**இறைவர் திருப்பெயர்:** புட்பவனநாதர், சதுரங்க வல்லபநாதர்.
**இறைவியார் திருப்பெயர்:** கற்பகவல்லி, இராசராசேசுவரி.
**கோயில் மரம்:** பலா மரம்
**தீர்த்தம்:** சீரபுட்கரணி தீர்த்தம், கிருஷ்ணகுட்ஹர தீர்த்தம்.
**வழிபட்டோர்:** திருஞானசம்பந்தர், அப்பர், சேக்கிழார், சுகப்பிரம்ம முனிவர்.
**பாமாலை:** அப்பர் பெருமான், தெய்வச் சேக்கிழார் பெருமான்.

**திருப்பூவனூர்த் திருத்தலம் மீது பாடப்பட்டத் திருப்பதிகங்கள் அருளிச் செய்தது.**

**பூவனூர்ப் புனிதன் திரு நாமந்தான்**
**நாவில் நூறுநூறாயிரம் நண்ணினார்**
**பாவம் ஆயின பாறிப் பறையவே**
**தேவர் கோ வினுஞ் செல்வர்களாவரே** - *(5,65)*

**தெய்வச் சேக்கிழார் பெருமான் அருளிச் செய்தது**
**(திருஞானசம்பந்தர் புராணம்)**

**பழுதில் சீர்த்திருப்பரிதி நன்னியமமும் பணிந்தங்கு**
**எழுது மாமறையாம் பதிகத்திசை போற்றி**
**முழுதும் ஆனவர் கோயில்கள் வணங்கியே முறைமை**
**வழுவில் சீர்திருப்பூவனூர் வணங்கி வந்தணைந்து** - *(12.28.375)*

### திருத்தலச் சிறப்பு

சோழநாட்டு காவேரித் தென்கரை தலங்களுள் 103 ஆவது திருத்தலமாகும். வெண்ணாற்றின் தென்கரையில் உள்ள தலம். இத்தலம் சுகப்பிரம்ம முனிவர் மலர்வனம் வைத்து வழிபட்ட தலம். இத்திருத்தல இறைவன் சதுரங்க வல்லபநாதர் எனும் சிறப்புப்பெயர் கொண்டு அழைக்கப்படுபவர். இங்குள்ள தீர்த்தங்களில் கோயிலின் பின்புறம் உள்ள 'கிருஷ்ண குஷ்டஹரம்' தீர்த்தம், தோல்நோய்களை போக்கும் தன்மையுடையது. ஆனபோதிலும் இவ்விரண்டும் பிணி தீர்க்கும் குளங்களாக உள்ளன. இந்த கோயிலில் இரண்டு தாயாருக்கும் தனித்தனி சந்நிதி உள்ளது. இது கோயிலில் இருக்கும் மற்றொரு மிக முக்கியமான சிறப்பு என்னவென்றால் இங்கே சாமுண்டீசுவரி



சந்நிதி உள்ளது.

இத்தலத்தில் உள்ள சாமுண்டேசுவரி சந்நிதி மிகவும் சிறப்பு வாய்ந்தது. மைசூருக்கு அடுத்து சாமுண்டீசுவரி அம்மன் அமர்ந்த நிலையில் காட்சி தருவது இந்த கோயிலில் மட்டும்தான். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இந்த சாமுண்டீசுவரி சந்நிதிக்கு முன்னால் விடம்தீண்டிப் பாதிக்கப்பட்டவர்களுக்குப் புண்பட்ட இடத்தில் வேர்



கட்டி விடப்படுகிறது. உடனே அவர்கள் அந்த வேருடன் கோயிலின் குளத்தில் குளித்துவிட்டு வந்தால் உடலில் இருக்கும் விடம் முறிந்து விடுவதாகக் கூறப்படுகிறது.

பூவனூரில் எழுந்தருளியுள்ள இறைவன் திருநாமத்தைத் தம் நாவில் நூறுநூறாயிரம் தடவை கூறிப் பரவியவர், தம் பாவங்கள் சிதைந்துகெட்டுத் தேவர் தலைவனாகிய இந்திரனைவிட மிகப் பெருஞ் செல்வர்கள் ஆவர். என்று அப்பர் பெருமான் தனது திருப்பதிகத்தில் திருவாய் மொழிந்தருளியுள்ளார்.

### திருத்தல வரலாறு

வசூசேனன் என்ற மன்னன் திருநெல்வேலி வேலியை ஆட்சி செய்து வந்தார். தனக்குக் குழந்தை வரம் வேண்டி தாமிரபரணி ஆற்றிலிருந்த தாமரை மலரின் மேல் கடும் தவம் செய்தார். தவத்தில் மகிழ்ந்த சிவபெருமான், அப்போது அவரது முன் தோன்றி, முன்னிருந்த தாமரை மேல் இருந்த சங்கை எடுக்கச் சொன்னார். அந்த சங்கு அழகிய பெண் குழந்தையாக உருவெடுத்தது. இறைவன் திருவருளால் உமையம்மையே மகளாக பிறந்ததை எண்ணி மகிழ்ந்த மன்னன் எம்பெருமானை வணங்கி, அக்குழந்தைக்கு 'இராசராசேசுவரி' என்று பெயரிட்டார்.

எல்லா கலைகளையும் கற்று வளர்ந்த அந்தப் பெண், சதுரங்க விளையாட்டில் மிகவும் தேர்ச்சி பெற்றவராக இருந்தாள். திருமண வயதை எட்டிய அந்த பெண்ணிற்கு மன்னர் திருமணம் செய்து வைக்க ஆசைப்பட்டார். அப்போது அந்த மன்னர், சதுரங்க விளையாட்டில் யார் தனது பெண்ணை வெற்றி பெறுகிறார்களோ, அவருக்கே அந்த பெண்ணை திருமணம் செய்து வைப்பதாக முடிவு செய்தார். பல தேசத்திலிருந்து வந்த மன்னர்கள் இராசராசேசுவரியிடம் சதுரங்க போட்டியில் தோல்வி அடைந்தார்கள்.

மணமகன் அமையாத துக்கத்தில் மன்னர் மீண்டும் சிவபெருமானை நோக்கி தவம் செய்கிறார். பின்னர் சிவபெருமான் காட்சி தர, தனக்கு நல்ல மணமகன் வேண்டும் எனச் சிவபெருமானிடம் அந்த மன்னர் கோரிக்கை வைத்தார். உடனே சிவபெருமான், "காவிரி ஆற்றின் தென் கரையில் உள்ள எல்லா சிவத்தலங்களிலும் வழிபாடு செய்" எனக் கூறினார்.

மன்னர் தனது குடும்பத்தோடு எல்லா சிவத்தலங்களிலும் வழிபாடு செய்வதற்காகச் செல்கிறார். அப்போது பூவனூரில் அமைந்திருக்கும் புட்பவன நாதர் கோயிலுக்குச் செல்கிறார். அப்போது அந்த கோயில் புட்பவன நாதப்பெருமான், முதியவர் வேடத்தில் வந்து, "நான் உங்கள் பெண்ணோடு சதுரங்க விளையாட்டை விளையாடுகிறேன்" எனக் கூறினார். அவரை ஏளனமாக நினைத்த மன்னர் சரி விளையாடுங்கள் என அனுமதித்து விட்டார். அந்த போட்டியில் முதியவராக வந்த சிவபெருமான் வெற்றி அடைந்து விடுகிறார். உடனே அதிர்ச்சி அடைந்த மன்னன் ஒரு முதியவருக்கு தன் பெண்ணை எப்படி திருமணம் செய்து தருவது என வருத்தம் அடைகிறார்.

உடனே முதியவர் வேடத்திலிருந்த சிவபெருமான் தனது சுயவடிவத்தைக் காட்டுகிறார். பின்னர் ஆனந்தம் அடைந்த மன்னன் தனது மகளான இராசராசேசுவரியைச் சிவபெருமானுக்குத் திருமணம் செய்து தருகிறார். இவ்வாறு சதுரங்கத்தில் வல்லபம் ஈட்டி உமையம்மையை கரம் பற்றியமையால், பூவனூர் பெருமானுக்கு 'சதுரங்க வல்லப நாதர்' எனும் திருப்பெயர் பெறலாயிற்று. பூவனூர் பெருமான் சதுரங்கம் விளையாடிய புராண நிகழ்வினை அப்பர்சுவாமிகள்,

**"அரிஅயன்தலை வெட்டி வட்டாடினார்**
**அரிஅயன் தொழுதேத்தும் அரும்பொருள்**
**பெரியவன் சிராப்பள்ளியைப் பேணுவார்**
**அரிஅயன் தொழ அங்கு இருப்பார்களே"**

என திருச்சிராப்பள்ளித் திருப்பதிகத்தில் பறைசாற்றிச் செல்கின்றார்.

### திருக்கோயில் அமைப்பு

திருக்கோயிலின் மாடவீதிகளின் கோடியில் நாற்புறமும் விநாயகர் கோயில் உள்ளது. பழமையான இராசகோபுரம் ஐந்து நிலைகளுடன் கூடி, கிழக்கு நோக்கியதாக காணப்படுகின்றது. முன்மண்டபத்தில் இடப்பக்கம் புகழ்பெற்ற சாமுண்டீசுவரி சந்நிதியில், அம்பிகை மூச்சூலம் ஏந்தி அமர்ந்த கோலத்தில் காணப்படுகின்றார். தலத்தின் கொடிமரம் செப்புக் கவசமிட்டு காணப்படுகின்றது. அதன் முன்னால் பலிபீடம், நந்தி உள்ளன. அடுத்துள்ள மண்டபத்தில் வலப்பால் கற்பகவல்லி அம்பாள் சந்நிதியும், பக்கத்தில் இராசராசேசுவரி அம்பாள் சந்நிதியும் என இரு அம்பிகை சந்நிதிகளும் தெற்கு நோக்கி காணப்படுகின்றன.

சுற்று வீதியில் பிரதான விநாயகர், இலக்குமி உடன் திருமால், காசி விசுவநாதர், தலமரம் பலா, வசுசேனன், அகத்தியர், ஐயனார், நால்வர், கோதண்டராமர், வள்ளி, திருமகள், மலைமகள், நான்முகன், உமைபாகனார் (அர்த்தநாரீசுவரர்), ஐயங்கொள் பெம்மான் (பிட்சாடனர்), ஆதிதாசர் (சண்டேசுவரர்) வள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணியர், பசுபதீசுவரர், பைரவர், ஒன்பான் கோள்கள் (நவக்கிரகங்கள்), சூரியன் என சிலை வடிவங்கள் வரிசையாக வைக்கப்பட்டுள்ளன.

மண்டபத்தில் நடராசர் சந்நிதியும், அருகில் சோமாசுகந்தர் சந்நிதியும் உள்ளது. இச்சோமசுகந்தர் சந்நிதியில் தியாகராசப் பெருமான் எழுந்தருளி இருப்பதாக நம்பப்படுவதால், எதிரில் செப்பாலான நந்தியும் உள்ளது. கருவறையில் மூலவராக



புட்பவ நாதர் தான்தோன்றி இலிங்கமாக வீற்றிருக்கின்றார். மூலவருக்கு முன்னால் பித்தளையாலான கோபுர அமைப்பு செய்து வைக்கப்பட்டுள்ளது. கோட்டத் திருமுன்களாக ஆலமர் கடவுள் (தட்சிணாமூர்த்தி), இலிங்கோற்பவர், நான்முகன், உமைபாகனார் (அர்த்தநாரீசுவரர்), மலைமகள், ஐயங்கொள் பெம்மான் (பிட்சாடனர்) ஆகியோர் உடன் ஆதிதாசர் (சண்டேசுவரர்) சந்நிதியும் உள்ளது.

இத்திருத்தலத்தில் நாடொறும் ஆறுகால பூசைகள் நடைபெறுகின்றன. தைப்பூசம், மாசிமகம், ஆவணிமூலம் ஆகியன விசேட நாட்களாக காணப்படுகின்றன. வைகாசி விசாகத்தில் பெருந்திருவிழா நடைபெறுகிறது. சாமுண்டீசுவரி அம்பிகைக்குச் சித்திரைத் திங்கள் மறைமதி நாளன்று (அமாவாசையில்) காப்புக்கட்டிப் பத்து நாட்களுக்கு விழா தனியாக நடைபெறுகிறது.

அண்மையில், இந்தியாவினுடைய பிரதமராக பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய, மதிப்பிற்குரிய திருவாளர் நரேந்திர மோடி ஐயா அவர்கள், பூவனூர் பெருமான் சதுரங்கம் ஆடிய சிறப்பினை நினைவுபடுத்திக் கூறியிருந்தமையும் இத்திருத்தலத்திற்க்குரிய சிறப்பம்சமாகும்.

**மைக்கடுத்த நிறத்து அரக்கன் வரை**
**புக்கு எடுத்தலும் பூவனூரன் அடி**
**மிக்கடுத்த விரல்சிறிது ஊன்றலும்**
**பக்கடுத்த பின் பாடி உயந்தானன்றே.**

**திருச்சிற்றம்பலம்**

சிவத்திரு. தென்னாடு நிலவன்
தென்னாடு - செந்தமிழாகம சிவமடம்,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
+94 21 221 2739 | nilavan@thennadu.org

# சிவபூமியில் சிவனைத் தேடி

## மட்டக்களப்பு திராய்மடு திருக்களாத்தீசுவரர் திருக்கோயில்

மட்டக்களப்பு தமிழகம் பழமைக் காலந்தொட்டு சைவ சமயப் பண்பாடுகளையும் அதனோடு தொடர்புபட்ட மரபு சார்ந்த அம்சங்களையும் தன்னகத்தே கொண்டு இயங்கும் தேசமாகவும், இன்றளவும் சிதைவின்றி பயில் நிலையில் இருந்து கொண்டு வருகின்றது. குறிப்பாக சிவவழிபாட்டிலும், தாய்த் தெய்வ வழிபாட்டிலும் தனித்தனி முத்திரை பதித்த தேசமாகவும் விளங்குகின்றது. இதற்கு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீசுவர சிவாலயத்தில் உற்பத்தியான தேசத்து மரபுகளும், தமிழ்மொழி வழக்கில் அமைந்த பத்தாசிச் சடங்குகளும் தகுந்த சான்றுகளாகும். இந்நிலையில் சிவாகம மரபுகளையும், மரபுசார் வழிபாடுகளையும் சிறப்புற பேணிவரும் சிவாலயமாக மட்டுநகர் திராய்மடு திருக்காளாத்தீசுவரம் விளங்குகின்றது.

### திருத்தல அமைவிடம்

மட்டக்களப்பு நகரிலிருந்து ஐந்து கிலோமீற்றர் தூ ரத்தில் திராய்மடு அமைந்துள்ளது. அதாவது மட்டக்களப்பு, திருகோணமலை செல்லும் பிராதான வீதியில் இருந்து திருப்பெருந்துறையின் கிழக்குப் பக்கமாகச் செல்லும் பாதையில் திராய்மடு எனும் பழம்பெரும் பதியில் இச்சிவாலயம் அமைந்துள்ளது.

இக்கிராமம் எழுவான் கரையோரமாக கற்பகதரு என்று சிறப்பிக்கப்படும் பனை மரங்களாலும், வயல் நிலங்களாலும், சிறு சிறு காடுகளாலும், சிறிய குளங்களாலும், குடிசனங்களின்



பெருக்கங்களாலும் அமைவுற்றுள்ளது. இத்தகு சிறப்பு வாய்ந்த ஊரில் மூர்த்தி, தல தீர்த்தச் சிறப்புக்களுடன் சிவபெருமானார் காளாத்தீசுவராக திருநாமம் கொண்டு எழுந்தருளி அருள் சுரந்து வருகின்றார்.

### திருத்தலச் சிறப்பு

இத் தலத்தின் மூலவராக காளாத்தீசுவரரும் நாயகியாக ஞானப்பிரசனாம்பிகையும் விளங்குகின்றனர். இத் தலத்தின் மூர்த்தியின் பெயரைத் தாங்கிய சிவாலயங்கள் தமிழ்நாட்டில் கீழமங்கலம், உத்தம பாளையும், காட்டாங்குளம், நங்கைமொழி, சைனாவரம் போன்ற ஊர்களிலும் உள்ளது. பெரியபுராணம் போற்றும் 63 நாயன்மார்களுள் ஒருவரான கண்ணப்பர் வழிபட்டு முத்திப் பேறு பெற்ற பெருமானின் பெயரும் திருக்காளத்தியில் அமைந்துள்ள காளகத்தீசுவரர் தான். காளகத்தி இறைவனை சம்பந்தர், அப்பர் ஆகியோர் தேவாரப் பதிகங்கள் பாடி சிறப்பித்தும் உள்ளனர்.



திரு.திருமதி.சீனித்தம்பி இராசையா அவர்கள்

இத்தலத்திற்கு சோழ, விஜயநகர நாயக்கர் காலத்து அரசர்களும் பல திருப்பணிகள் புரிந்துள்ளனர். இவ்வாறு சிறப்புப் பெற்ற மூர்த்தி திராய்மடு சிவாலயத்தில் எழுந்தருளி அருள்பாலிப்பது இங்குள்ள சிவ அடியார்களின் பாக்கியமேயாகும்.

இத் தலத்தின் மரமாக விளங்குவது பனை ஆகும். நான் அறிந்த வகையில் ஈழத்தில் பனைமரம் தலமரமாக அமைந்த சிவாலயமாக இத்தலம் சிறப்பு பெற்றுள்ளது. இங்குள்ள தீர்த்தக் குளம் அற்புத சத்தி வாய்க்கப் பெற்றது. குளத்தில் திருநீறு போன்ற வெண்ணிறச் சேறு இயற்கையாகவே உருவாகியுள்ளது. இங்குள்ள பிரதேசத்தவர்கள் இக்குளத்து நீரை நோய் தீர்க்கும் அற்புத மருந்தாகவும், திருவிழா நாளில் தீர்த்தம் ஆடும் புண்ணிய குளமாகவும் போற்றுகின்றனர்.

இத்தலத்தின் மூர்த்தி தல தீர்த்தச் சிறப்புக்களை இப்பிரதேசத்தில் வாழ்ந்த கவிஞர் ஒருவர் இவ்வாறு பாடித் தூதித்துள்ளார்

**“கதிரவன் பொற்கரம் நீண்டுவர**
**காரிருள் மெல்ல அகன்று வர**
**கற்பக தரு நிழல் நடுவினிலே**
**காளாத்தி நாதர் அம்மையுடன்**
**காட்சி அளித்த பதி”**

### திருத்தல வரலாறு

தல வரலாறு பற்றி இப்பிரதேசத்தாரிடம் ஒரு செவிவழிமரபுக் கதை நிலவி வருகின்றது அக்கதை தமிழகத்துடன் தொடர்புபட்டதாக வழங்கப்படுகின்றது. மண்டூர் கிராமத்திற்கு அண்மையில் விளாவட்ட வான் எனும் குக்கிராமம் அமைந்துள்ளது. அங்கு செட்டி கந்தவனப் பிள்ளையார் கோயிலொன்று காணப்படுகின்றது. இக் கோயில் மிகவும் தொன்மையும் அற்புதமும் வாய்க்கப் பெற்றதாகும். இப்பிள்ளையார் மீதும் சிவன் மீதும் பத்தி கொண்டவரும், அப்பிள்ளையார் கோயிலில் ஏறத்தாள 30 ஆண்டுகள் திருப்பணி புரிந்து வந்த சீனித்தம்பி இராசையா என்பவரின் கனவில் இறைவன் தோன்றி திராய்மடு எனும் கிராமத்தில் திருக்காளாத்தீசுவரர் எனும் பெயரில் ஓர் ஆலயம் அமைக்குமாறும், இதற்குத் தேவையான அனைத்தும் கிட்டும் என வாக்கு கூறி மறைந்ததாகவும் இக்கனவுக் கேற்றால் போல் மறுநாள் ஒரு முதியவர் நான் தமிழகத்தில் இருந்து வருகிறேன். இது உங்களுக்குத்தான் என்று கூறி தண்ணீர் செம்பொன்றும் ஒரு ஏட்டுப் பிரதியொன்றையும் இராசையா கையில் ஒப்படைத்து இப்பொழுது ஆலயம் இருக்கும் இடத்தைச் சுட்டிக்காட்டி இங்குதான் காளாத்திப் பெருமான் அமர விரும்புகின்றார் எனக் கூறி மறைந்து விட்டார்.



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

இவ் அதிசய நிகழ்வை இராசையா ஊரவர்களிடம் தெரிவித்து, பனைகள் சூழவுள்ள அவ்விடத்தில் சிறிய ஆலயம் ஒன்றை அமைத்து, சிவலிங்கத்தையும் வைத்து, இம்முதியவர் கொடுத் செம்பையும், ஏட்டுப் பிரதியையும் வைத்து, பூசைகளையும் ஆரம்பித்தார், அவரின் மறைவிற்குப் பின்னர் ஆலயம் ஆகம விதிப்படி நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. விநாயகர், முருகன், காலபைரவர், ஆஞ்சநேயர், மலைமகள், திருமால், ஆதிதாசர் (சண்டேசுவரர்) ஆகியோர். பரிபாரத் தேவர்களாகவும் விளங்குகின்றனர்.

### பூசைகளும் விழாக்களும்

மூன்று வேளை நித்திய பூசைகள் நடைபெற்று வருகின்றது. சிவனிரவுக்கு, ஐந்து நாட்கள் முன்னராகவே திருவிழா ஆரம்பித்து சிவனிரவு அன்று காலை தீர்த்தக் குளத்தில் தீர்த்தத் திருவிழா நடைபெற்று வருகின்றது.

இங்கு கழுவாய் தினங்களில் நந்தியெம்பெருமானுக்கு சிறப்பு பூசைகள் இடம்பெறுவதால், அந்நாட்களில் இங்கு பத்தர் கூட்டத்தை காணலாம். மற்றும் சிவனிரவு, ஒன்பா



பனை ஓலையில் சுற்றி புதிர் கொடுத்தல்

னிரவு (நவராத்திரி), திருவாதிரைத் திருவிழா, திருவெம்பாவை ஓதல், திருவாசக முற்றோதல், திருக்கார்த்திகை தினங்களில் சிறப்பான பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

இக்கோயிலில் சித்திரை குப்த விரதமும் கடைப்பிடிக் கப்படுகின்றது. அன்றைய தினம் ஏடுபடிக்கும் நிகழ்வு, கஞ்சி படைத்தல் பூசைகளும் இடம்பெறும் தைப்பொங்கல், தைப்பூசம், வருடப்பிறப்பு, தீபாவளி ஆகிய விழாக்ளும் சிறப்பான பூசை வழிபாட்டு முறைகளும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பு தேசத்து வழிபாட்டு மரபுகளும் இவ்வாலயத்தில் பின்பற்றப்பட்டு வருவது சிறப்பான விடயமாகும். திருவிழாக்கள் உள்ளூர், வெளியூர் பொதுமக்களாலும் செய்யப்பட்டு வருவதற்கு உரித்துண்டு. ஆலயத்தில் ஏற்றப்படும் கொடிச்சேலை கோயில் தலைவரின் இல்லத்திலிருந்து வருடா வருடம் எடுத்து வரப்படும் வழமை இன்னும் தொடர்கின்றது. ஊர்க் கமக்காரர்கள் முதல் விளைச்சலின் நெல், மரக்கறிகளை இக்கோயிலுக்குத் தானம் கொடுப்பதோடு புதிர்படைத்தல், புதிர்ப்பொங்கல், மரக்கறி அமுது படைத்தல் போன்ற மரபு சார்ந்த நம்பிக்கைகளையும் செய்து வருகின்றனர்.

இவ்வாலயம் சமூகப் பணிகளையும் புரிந்து வருகின்றது. ஆலய வளாகத்தில் சிவன் அறநெறிப் பாடசாலையை நடாத்தி வருதல், சிவன் அன்னதான மண்டபம் அமைத்து அன்னதானம் அளித்து வருதல், வாராவாரம் சைவப்புலவர்களைக் கொண்டு சமயப்பிரசங்கம் புரிதல், தீட்சை நிகழ்வை நடாத்துதல் போன்ற சமயப் பணிகளையும் புரிந்து வருகின்றது.





# தென்னாட்டு நிகழ்வுகள்




ஆடி மறைமதி தென்புலத்தார் வழிபாடுகள் (28-07-2022)

ஆடித்திங்கள் தேய்பிறை கழுவாய் வழிபாடும் தென்னாடு வெளியீடும் (26-07-2022)





சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை (05-08-2022)





ஆடிப்பூர வழிபாடுகள் (01-08-2022)

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் இருபத்து மூன்றாவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு”, சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு கடகம் நல்லோரை ஆடித் திங்கள் 26ம் நாள் நிறைமதி அன்று (11-08-2022 வியாழக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி , தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் - HA/4/JA/343.

தொலைபேசி +94 21 221 2739 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org